WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்



# AKARAM
# அகரம்

14.10.2017 - 13.11.2017

சுவடி: 6.06

திருவள்ளுவர் ஆண்டு 2048

ISSN 2195-6480




மட்டு நகர் பிரதிநிதி
யோகேஸ்வரன்
ஆன்மீக வாதியா
அரசியல் வாதியா?

# போரைத் தீர்மானிப்பது
# யார்..?

FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


Asiatische - Afrikanische & Europäsche
Lebensmittel Einzelhandel
TKS BEST FOODS
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de
ஜெர்மனியே வியக்கும் வண்ணம்
எங்களது தள்ளுபடி விற்பனையை
பெரிய அளவில் வெற்றியடையச்செய்த
எங்கள் அருமை
வாடிக்கையாளர்களுக்கும்,
வர்த்தக வினியோகஸ்தர்களுக்கும்,
இந்த தள்ளுபடி விற்பனையில் எங்கள்
தோளோடுதோள் கொடுத்த நண்பர்களுக்கும்,
முழு ஒத்துழைப்பு நல்கிய எங்கள்
பணியாளர்களுக்கும், மற்றும் ஏனைய
வியாபார நண்பர்களுக்கும்
கோடான கோடி நன்றிகள்...!
TKS BEST FOODS
THANK YOU!
4 வது
ஆண்டில்
உங்களின் அன்றாட தேவைகளுக்கும்,
உங்களின் வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன் பலசரக்குப்
பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் மீன் வகைகளை எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்!
TKS BEST FOODS
Mobile: 0151 25 300 400
tksbestfoods
Rheinische Str. 79, 44137 Dortmund
Tel.: 0231 95 04 68 83
Fax.: 0231 95 04 68 82
NIDO
Tilda

புதிய வரவு

ஐரோப்பாவிற்க்கான புதிய சேவை

**ortel MOBILE**







# 19,99€[15) /4 Wochen

# ஒரே SIMல் இருந்து...

## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.

## 3GB இன்ரர்னெற்றும் பாவிக்கலாம்.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும்,

அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.

3GB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு பெறலாம்.

**19.99 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**




- 300 Minuten in Deutschland & in 50 weitere Länder
- Internet Flat 3 GB
- Surfen&Telefonieren in der EU
- On-Net Flat (deutschlandweite Nutzung)




அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

13. ஐப்பசி - 14. கார்த்திகை 2017
சுவடி / Issue: 6.06

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 95 66 10
Email: *editor@akaram.eu*



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


# நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வாள்ளல் பெரு மக்களுக்கும் வணக்கம்.

உலகம் ஒரு புதிய திருப்பத்தை எடுப்பது போன்று செய்திகள் வருகின்றன முதலாவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையர் இலங்கை தொடர்பாக கொடுத்த எச்சரிக்கையும் சர்வ தேச சட்டங்களை அமுல் படுத்த வேண்டிய தேவையை இலங்கை அரசின் ஆக்க பூர்மான செயலற்ற நிலை தொடருவதாக குறிப்பிட்டிருப்பது. அவரது எதிர் பார்ப்பை இலங்கை அரசு எக்காலத்திலும் நிறைவு செய்யாது என்பதே அதன் 70 ஆண்டுகால சாதனையாக இருக்கிறது. எனவே போர்க் குற்ற விசாரணையும் அது தொடர்பான ஏனைய விடயங்களும் ஈழத் தமிழர் தேவையை நிறை வேற்ற வேண்டிய கட்டாயத்தை உருவாக்கும் என நம்பலாம்.

இரண்டாவதாக முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் அமைச்சர் அனந்தியும் கண்டி அஸ்கிரிய மகா நாயக்கரிடம் உச்ச நீதி மன்றமே சமஷ்டி முறை பிரிவினை அல்ல எனத் தீர்ப்பளித்து விட்ட நிலையில் சமஷ்டி ஆட்சி முறை ஒன்றுதான் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தீர்வு எனவும் 13வது திருத்தமும் அல்ல என உறுதிபடத் தெரிவித்து அதனை எழுத்து வடிவில் கையளித்தும் உள்ளனர். அதற்கு மகா நாயக்கர் சாதகமான முறையில் பதிலறிக்கை கொடுத்திருப்பது சிறு மாற்றம் எனலாம். ஆனால் அந்த அவல் கூட தமிழர் வாய் வரை வரும் எனச் சொல்ல முடியாது.

எனவே வைச்சால் குடுமி அடிச்சால் மொட்டை என்பது போல சமஷ்டியா தனி நாடா என்பதே எடுக்கப் பட வேண்டிய முடிவு. இறுதி தெரிவு சிங்களத்திடம் உள்ளது. சமஷ்டித் தீர்வானாலும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இறையாண்மையை தமிழருக்கு இருக்கு என்ற முன் நிபந்தனையை தமிழர் தரப்பு உறுதி செய்வது கண்டிப்பாக இருக்க வேண்டும். அத்தகைய நிபந்தனை ஒன்றுதான் தமிழருக்கு நிலையான அமைதியான பாதுகாப்பான வருங்காலத்தை உறுதி செய்ய முடியும்.

எந்த நிலையிலும் போர்க் குற்ற சர்வதேச

விசாரணையும் தமிழ் மக்களுக்கான நீதியும் கிடைப்பதை எமது தலைமை சமரசமோ விட்டுக் கொடுப்போ செய்யக் கூடாது என்பதில் தெளிவாக உறுதியாக இருக்க வேண்டும்.

உலக அரங்கில் பல புதிய நாடுகள் பிரிவினை மூலம் உருவாகி விட்டன. உருவாகவும் போராடி வருகின்றன. அந்த வரிசையில் உலகக் காதல் சோடியான ரோமியோ ஜுலியட் அமரத்துவம் அடைந்த கற்ற லோனா பிராந்தியம் ஸ்பானிய தேசத்தில் இருந்து பிரிந்து தனிநாடாக போராடி வருகிறது. ஒரே மக்கள் ஒரே தேசம் ஆயினும் கற்றலோனிய மக்கள் பிடிவாதமாக பிரிவினை கேட்டுப் போராடி வருகின்றனர். ஸ்பானிய மத்திய அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது.

ஆனால் கற்ற லோனிய மக்கள் பிடிவாதமாக ஒரு கருத்து வாக்கெடுப்பு நடத்த அழைப்பு விடுத்தனர். அதனை மத்திய அரசு சட்ட விரோதம் என அறிவித்து மத்திய காவல் படை கொண்டு தாக்குதலை நடத்தி தடுக்க முயன்றும் அனைத்தையும் மக்கள் முறியடித்து தொன்னூறு சத வீதமான ஆதரவு வாக்குகள் வழங்கி பிரிவினைக்கு ஆணை வழங்கி விட்டனர்.

அரசும் ஐரோப்பிய ஒன்றியமும் சட்ட விரோதமான மக்கள் ஆணை எனக் கூறினாலும் மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற ஆணையை எந்தச் சட்டத்தால் சட்ட விரோதம் எனப் பிரகடனப் படுத்த முடியும். அரசியல் சட்ட வாதங்களில் இது நிச்சயம் ஒரு புயலை உருவாக்கும் என நம்பலாம்.

இதற்குச் சமாந்தரமாக 1977ல் எமது மக்கள் பொதுத் தேர்தலை தனித் தமிழ் ஈழப் பிரகடனமாக வாக்கைப் பெற்ற தலைவர்களும் வாக்களித்த மக்களும் என்ன செய்யப் போகின்றனர்? புலம் பெயர் மக்களிடையே நடத்தப் பட்ட வட்டுக் கோட்டைப் பிரகடனத்தை உறுதி செய்த வாக்கெடுப்புக்கு என்ன நடந்தது அதனை யார் எப்படி எதற்குப் பயன் பயன்படுத்தினார்கள்??

அடுத்து என்ன செய்வது என்பதை சம்பந்தப் பட்டவர்கள் மக்களுக்குத் தெரிவிப்பதோடு, புலத்தில் ஈழக் கோரிக்கை மீண்டும் உரக்க ஒலிக்கச் செய்வது தாயக மீட்பு அரசியலை ஊக்குவிக்கும் என்பதால் தூக்கத்தை விடுத்து விழிப்புடன் விடுதலைப் போரைத் தொடர வேண்டும் என்ற வேண்டுதலை வைத்து விடை பெறுகிறோம்.

(மு.கு.: பிரான்ஸ் நாட்டுக்கான வெளியீட்டில் ஒரு தொகுதி கடந்த அகரம் இதழில் அச்சு தொகுப்பில் ஏற்பட்ட தவறினால் சில பக்கங்கள் மாறுதலாக சேர்க்கப்பட்டுவிட்டது. பக்க இலக்கம் சரியானது ஆனால் ஒழுங்கு தவறாக சேர்க்கப்பட்டுவிட்டது. இனி வரும் காலங்களில் இந்த தவறு வாராமல் பார்த்துக்கொள்ளுகின்றோம். இந்த தவறுக்கு மன்னிக்கவும்.)

அன்புடன்,

அகரம் குழுமம்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels

For satellite news, live radios, TV-Guide,
Radio-schedules,
contact details of Tamil channels in the world etc.

www.mediaasia.in



# தமிழ் மக்கள் மோசம் போனது இப்படித்தான்!

த.எதிர்மன்னசிங்கம்

"ஸ்ரீ லங்கா காலமெல்லாம் ஒரு ஒன்றிணைந்த பிரிக்கப்படாத பிரிக்க முடியாத நாடாக இந்த நாட்டின் அடிப்படையான அதிஉயர் சட்டத்திற்கு அமைவாகவும் அதன் எல்லா மக்களதும் சுயமான விருப்பம் சம்மதம் என்பவற்றின் அடிப்படையில் இருக்கும்.

நாங்கள் (?) எமது புகழை மீட்டெடுத்து சர்வ தேசங்களின் மதிப்பை வெற்றி கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்தப் பிராந்தியத்தில் உள்ள மற்றைய நாடுகள் தொடர்ச்சியாக முன்னேற்றம் அடைந்து தமது குடிமக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்திய நிலையில் எமது பொருளாதாரம் மிகப் பெருமளவில் பின்னடைந்தும் நமது பொரளாதாரத்தில் பின் தங்கி இருக்கிறோம். அவர்களின் வாழ்க்கைத் தரம் எங்கள் நாட்டில் இருந்ததைவிட முன்பு குறைவாக இருந்தது. பாதுகாப்புக்கு பெருமளவு செலவினம் செய்த காரணத்தால் பல முக்கிய துறைகளில் செய்யப்பட வேண்டிய வளங்களை பயன்படுத்தியதால் பின்னடைவுக்கு வழி வகுத்தது.

இந்தக் காரணிகள் எல்லாம் எமது நாட்டுக்கு ஒரு புதிய எதிர் காலத்தை உருவாக்கவும், ஒரு புதிய அதி வலுவான அடிப்படைச் சட்டத்தின் மீது நாம் ஒன்றிணைந்து இந்தப் புனித சாதனையை நிறைவேற்றவும் வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகின்றன."

26.09.2017 ஸ்ரீ லங்கா நாடாளு மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் உத்தேச புதிய அரசமைப்புத் திட்ட வரைவு பற்றி பேசிய வசனங்கள் இவை.

கடந்த 25 ஆண்டுகளாக சந்திரிகா, ரணில், மகிந்தா் மைத்திரி பின்னாலும் சுவிஸ் கனடா, பிரித்தானியா , அயர்லாந்து அமெரிக்கா , இந்தியா என ஓடி ஓடிப் படித்த பாடம் எல்லாம் இப்படி ஒரு தீர்வுத் திட்டத்தை தமிழ் இனத்தின் தலைகளில் போடத்தானா ஆசைப் பட்டாய் பால குமாரா?

சட்டத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் தமக்கு ஏற்றவாறு பேசி தமிழ் மக்களை ஏமாற்றலாம். ஆனால் அதன் உண்மை முகமும் கோர வெறியும் அதற்கு சிங்கள நீதி மன்றங்கள் கொடுக்கும் தீர்ப்புகளும் சிங்களத்துக்கு மட்டுமே தெரிந்தவையாக இருக்கும் என்பதை இந்த அரசியல் ஞான சம்பந்தனும் அவரது பிரதம சீடன் சுமந்திரனும் மறுப்பார்களா?

### சொர்ப்பன சுந்தரி சந்திரிகா !

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் கனவுக் கன்னி சந்திரிகாவை யாரும் மறந்து விட முடியாது. கொண்டை போட்ட கண்டவரை மயக்கி விமானக் குண்டுகள் போட்டும் சூரியக் கதிர் முதல் பாதை திறப்பு வரை பல சாகசங்களை நிகழ்த்திக் காட்டியவர்.தமிழ் இனக் படுகொலைகளை இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்த பெற்றோர்களின் அருந்தவப் புதல்வி.

இன்று கொண்டையும் போய் கோலமும் அழிந்து வந்து 19.09.2017ல் அம்பாறை சாகாமம் கிராமத்தில் ஒரு கூட்டத்தில் பேசியதை கவனியுங்கள்!

"நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப் பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தேன்.அந்தச்

சந்தர்ப்பத்தில் எனக்கு சம்பந்தன் நீலம் திருச்செல்வம் ஆகியோர் பாரிய பங்களிப்புகளை வழங்கி இருந்தனர்."

"17 வருடங்களின் பின்னர் மீண்டும் ஒரு புதிய யாப்பு சீர் திருத்தத்தை வரைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனூடாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது."

## இன்று வந்ததும் அதே நிலா!



குறிப்பாக சம்பந்தன் புலிகளோடு கூட இருந்து குழிபறித்து அழித்த கோமான். அன்றைய சாணக்கியன் அல்லது மகா பாரதத்தில் சகுனி நடத்திக் காட்டிய சாதனைகளைத் தூக்கிப் போடும் அளவுக்கு சம்பந்தனின் அரசியல் சாணக்கியம் அம்பலமாகி உள்ளது. சந்திரிகா குறிப்பிட்ட 17 ஆண்டுக் காலத்தில் இவர் எங்கெல்லாம் யாரிடம் எல்லாம் என்ன பேசினார் என்பதை எவரும் அறியமாட்டார்கள்.

இன்று வரை இவர் பிரபாகரன் அன்ரன் பாலசிங்கம் போன்றவர்களுடன் பேசியதும் பழகியதும் வீர காவியமாக பார்க்கப் படுகிறது. அப்பொழுது எல்லாம் இவர் உள்ளத்தில் என்ன கள்ள எண்ணங்கள் இருந்திருக்கலாம் என்பதை இப்பொழுதும் கூட பலர் நினைத்துப் பார்க்க மறுக்கின்றனர். அந்த அளவுக்கு கற்பொடு காணப்படும் காரிகை போல பத்தினியாகக் காட்சி அளிக்கிறார். சிவாஜிக்கும் நம்பியாருக்கும் வீரப்பாவுக்கும் விருதுகளை அள்ளிக் கொடுக்கும் இந்த உலகம் இவருக்கு என்ன விருது கொடுக்கலாம் வானகமா? வையகமா?

இவர் அப்படி என்றால் குருவை மிஞ்சும் சீடன் எனும் அளவுக்கு வெட்டி விழுத்திப் பேசும் மதியாபரணம் ஆபிரஹாம் சுமந்திரன் கதையோ சொல்லவே தேவை இல்லை. மக்களின் எந்த ஒரு முறைப்பாடும் கோபமும் கூச்சலும் இவர் காதுகளில் விழுவதே கிடையாது. அவரது இந்தப் பேச்சை கவனியுங்கள்:. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கனின் புகழ் பெற்ற ஜெட்டிஸ்பேரக் உரை கூட அவரது இந்தப் பேச்சுக்கு ஈடாக முடியாது.



"தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் விவகாரங்களைக் கையாளுகின்ற எம்.ஏ.சுமந்திரன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் "60 வருடங்களாகத் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட வில்லையா? இன்னொரு முறை நிகழ்ந்தால் கேடொன்றும் இல்லை" ,என்பதாக இந்த இணக்க முயற்சிக்கு வாதம் செய்திருந்தார் என்கிறது செய்தி.

இப்படியான முட்டாள் தனமான அதிகார மமதை கொண்ட பேச்சை அமிர்தலிங்கம் பேசிக் கூட யாரும் கேட்டிருக்க முடியாது. இப்படி அவர் பேச கட்சி அனுமதிக்குமாக இருந்தால் அக்கட்சியின் உறுப்பினர்கள் ஆறு அறிவு உள்ள மக்களா அல்லது ஐந்து அறிவு மட்டுமே உள்ள மாக்களா? தட்டிக் கேட்கும் தன்மான உரிமை தலைமைக்கு இல்லை என்றாலும் கட்சித் தொண்டர்களுக்குக் கூட இல்லாமல் குருட்டுத்தனமான ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதை எண்ணி ஒட்டு மொத்தத் தமிழினமும் வெட்கப் படுகிறது வேதனைப் படுகிறது. கட்சியின் தேர்தல் மேடைப் பேச்சில் மயங்கி வாக்கை போடும் மக்களுக்கும் தட்டிக் கேட்கும் துணிச்சல் கிடையாதா?

உத்தேச சட்ட வரைவில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளோ அடிப்படை உரிமைகளோ தாயகம் தேசியம் தொடர்பான சட்ட உறுதிப்பாடுகளோ இல்லாமலும் தமிழ் மக்களிடம் பெற்ற கருத்துகளை புறம் தள்ளியும் தயாரிக்கப் பட்ட சட்ட வரைவை வழிப் படுத்தல் குழுவில் மதியாபரணம் சுமந்திரன் முன்மொழிந்தார். இதனை இவர் எப்படி முன்மொழியலாம் என எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் கேலி செய்து கிண்டல் அடித்தனர். சுமந்திரனுக்கு எதையும் தாங்கும் உயர்வான உள்ளம் இருக்கிறது. சம்பந்தன் என்ற சாடிக்கு ஏற்ற மூடி என்பார்களே அது இதுதானா?

சித்தார்த்தனோ சுமந்திரனை தூக்கி எறிவது போல

வந்திருப்பது வெறும் நகலே அதை வைத்து காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்: மூலம் வந்த பின்னர் பார்க்கலாம் என்கிறார். நகலே எவருக்கும் காட்ட மறக்கிறார்கள் அது சட்டமாக நிறைவேறிய பின்னர் சந்திரனைப் பார்த்தா குலைப்பது. கிடைத்த உல்லாச சொகுசுக் கார்கள் இந்த அளவுக்கு எல்லாரையும் பேச வைக்கிறது. நாமே நம்ம காரியத்தைப் பார்ப்போம் யார் என்ன கேடு கெட்டால் என புலிகளை அழிக்க ஒட்டுமொத்த இனப்படு கொலைக்கே ஆதரவு கொடுத்த மகானுபாவர்கள் தமிழ் இனத்தின் வாழ்வையும் வளத்தையும் வருங்காலத்தையுமா பாதுகாப்பதர்கள்?

சிங்களத்துக்கு இது நல்ல தருணம்!



ஸ்ரீமாவோவின் சிங்கள பௌத்த மக்கள் குடி அரசு ஸ்ரீ லங்கா சோஷலிச சிங்கள பௌத்த மக்கள் குடியரசை உருவாக்கியதன் மூலம் முதன் முறையாக தமிழ் மக்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி உரிமைகள் பறிக்கப் பட்டு சிங்கள இனத்தின் தமிழ் இனப் படு கொலைகளை சட்டப்படி உறுதி செய்தவர் சந்திரிகாவின் தாயார் ஸ்ரீமாவோ. கணவன் பண்டார நாயக்காவால் முடியாத சாதனை மட்டும் அல்ல வேறு எந்த அரசியல் தலைவரும் நினைத்தும் பார்க்க முடியாத சாதனை அது. பெரும்பான்மை பலமே இல்லாமல் இடது சாரி கம்மியூனிசக் கட்சிகளின் ஆதரவுடன் நடத்திக் காட்டிய இராஜதந்திர சாணக்கியம் அது.

1972ல் ஸ்ரீமாவோ ஏற்படுத்திய குடியரசு அரசியல் திட்டத்தை எமது வாக்கைப் பெற்ற பிரதிநிதிகள் யாரும் ஆதரித்து வாக்களிக்க வில்லை. வாக்களித்த செல்லையா குமார சூரியரும் எம்.சி சுப்பிரமணியமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நியமன உறுப்பினர்கள் என்பதால் தமிழர் மானம் தப்பித்தது. அப்போதும் தமிழ் அரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்காமல் அரசியல் விபச்சாரம் செய்தது.

எதிர்த்து நீதி மன்றத்தில் வவுனியா பிரதிநிதி ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணிக் கட்சித் தலைவர் செ. சுந்தரலிங்கமும் எவரது சூழ்ச்சியாலோ அவ்வழக்கைத் தொடராமல் விட்டார்.

இந்த குடியரசு அரசமைப்புதான் சிறு பான்மை மக்களுக்கு எதிரான சட்டங்களை சிங்கள அரசுகள் ஏற்படுத்துவதைத் தடுக்கும் சோல்பரி அரசுத் திட்டம் விதித்த 29வது சரத்தை இல்லாமல் செய்தது. ஆனால் சட்ட மேதைகளான ஜீ.ஜீ. செல்வா திருச்செல்வம் தமிழர் உரிமை காக்க வழக்கும் தொடுக்காமல் தமிழ் மக்களை நட்டாற்றில் கைவிட்டு கைலாசம் போயினர். தமிழன் அரையில் இருந்த துண்டும் காணாமல் போனது.



ஸ்ரீமாவோவின் அரசமைப்பை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசமைப்பாக ஏற்படுத்தியவர் ஜே.ஆர். அவர் தாம் விரும்பிய அனைத்து அதிகாரங்களையும் சட்டப்படி எடுத்துக் கொண்டார். சிங்கள இன மொழி பௌத்த மத நாடாக இலங்கையை சிங்கள நாடாக்கி பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் முள்ளி வாய்க்கால் தமிழ் இனப் படுகொலைகளுக்கும் இன்றைய இராணுவ அடக்கு முறை ஆட்சிக்கும் தமிழ் இனத்தை உள்ளாக்கி விட்டார்.

இந்த இரு அரசமைப்புச் சட்டங்களும் பயங்கரவாத தடைச் சட்டம் 6வது திருத்தச் சட்டமும் தமிழினத்தின் தாயகத்தை, தேசியத்தை, தன்னாட்சி உரிமைகளை பறித்து முழுமையான அடிமை மக்களாக ஆக்கி விட்டன. இவற்றில் இருந்து தமிழ் இனம் மீள வேண்டுமானால் ஐ.நா சபை மூலம் ஒரு சர்வதேச விசாரணை நடத்தி சிங்கள அரசை மனித உரிமை மீறல், போர்க் குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தி அதன் மூலம் தமிழ் இனம் தனித்த அரசமைத்து வாழும் உரிமையை பெற்று தனித் தமிழ் ஈழ அரசை உருவாக்குவது ஒன்றுதான் உள்ள ஒரே தீர்வு.

ஆனால் சிங்கள அரசுகள் கடந்த 70 ஆண்டுகளாக நடத்திய தமிழ் இன அழிப்பு இனச் சுத்திகரிப்பு, அடிப்படை மனித உரிமை மீறல்கள் தமிழர் பிரதேசங்களில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், அவை ஏற்படுத்திய இனச் சுத்திகரிப்பு குற்றங்களில் இருந்து தப்பிக்கவே முடியாத அளவுகுக்கு உள்நாட்டிலும் சர்வ தேச அரங்குகளிலும் ஆதாரங்கள் சாட்சியங்களாக குவிந்து கிடக்கின்றன.

எனவேதான் வடமாகாண சபை நிறைவேற்றிய இரு தீர்மானங்களும் ஐ.நா.சபைச் செயலர் பான் கீ மூனிடம் கையளிக்கப் பட்டும் விட்டது. மேலும் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு இறுதியாக இலங்கை அரசும் அமெரிக்க அரசும் இணைந்து சர்வ தேச நீதிபதிகள் அடங்கிய விசாரணை மன்றம் அமைத்து போர்க் குற்றங்களை நீதி விசாரணைக்கு உட்படுத்துவது என இலங்கை அரசு வாக்குறுதியும் ஐ.நா. வில் வழங்கி விட்டது.

அதனால் இன்று சம்பந்தனால் அரசியலுக்கு இழுத்து வரப் பட்ட வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ் இன அழிப்பில் ஈடுபட்ட இந்தியா அமெரிக்கா பிரித்தானிய உள்ளிட்ட சர்வதேச அரசுகளுக்கும் அவர்களின் அடியாட்களாக தமிழினத்தை கையாளும் சம்பந்தன் தலைமையிலான பேர்களுக்கு விக்கினேஸ்வரன் எதிரியாகத் தெரிகிறார்.

புலிகளையும் தமிழ் மக்களையும் கூட இருந்து அழித்தவர்கள் இன்று விக்கினேஸ்வரனின் இரத்தத்தை குடித்துவிடத் துடிக்கிறார்கள் ஆனால் அவரைத்தான் தமிழ் இனம் நம்பிக் காத்துக் கிடக்கிறது.இதை நன்கு தெரிந்து கொண்ட அரசுகளும் சிங்களமும் விக்கினேஸ்வரனைப் பொது எதிரியாகக் கொண்டு ஒரு பனிப் போரை நடத்துகிறது. முள்ளிவாய்க்கால் போர் மூலம் புலிகள் மீது தமது வன்மங்களை செயல்படுத்தி தமிழ் இன அழிப்பையே செய்ய உதவிய அதே துரோகக் கும்பல் இப்பொழுது விக்கினேஸ்வரனை செயற்பட விடாமல் தடுத்துவிட துடியாகத் துடிக்கின்றது. முடிவு எப்படி ஆகும்?




## Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்திமஹால் மண்டபம்



சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...







## திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா

அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K. Kowthaman | S. Manivannan | K. Vijayasuresh |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

Web: www.varasithy-mahall.ch | E-Mail: varasithymahall@hotmail.com

சண் தவராஜா



# காலத்தின் தேவை அரசியல் வேலை

தலைப்பைப் பார்த்ததும் முன்னரேயே எங்கோ, எப்போதோ பார்த்த ஞாபகம் வாசகர்களுக்கு வரக் கூடும். 2004 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் எனது நண்பரும் ஊடகத் துறை வழிகாட்டியுமான அமரர் தராக்கி சிவராம் எழுதியிருந்த ஒரு கட்டுரையின் தலைப்பே இது. தென்னிந்தியத் திரைப்படங்களே தலைப்புப் பஞ்சம் காரணமாக பழைய திரைப்படங்களின் தலைப்புக்களைக் கொண்டு வெளிவரும் போது நாமும் அதுபோல் முயற்சிப்பதில் தவறில்லை என நினைத்தேன். அது தவிர, காலத்துக்குப் பொருத்தமான தலைப்பாகவும் இருப்பதால், அதனை எடுத்தாளலாம் எனவும் கருதினேன்.

2009 மே மாதத்திற்குப் பிந்திய தமிழர் அரசியல் திசை தெரியாமல் அலைகின்றது என்ற வாதப் பிரதிவாதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அரசியலில் பங்காளிகளாக இருப்பவர்களும் பார்வையாளர்களாக இருப்பவர்களும் கூட இந்த விமர்சனங்களில் அதீத ஈடுபாட்டுடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. 'பாதை மாறிய கால்கள் என்றும் ஊர் போய்ச் சேர்வதில்லை" என்ற விடயம் தெரிந்த போதிலும் அரசியலை நகர்த்திச் செல்பவர்கள் பாதை மாறியவர்களாகவே தென்படுகின்றனர். இது தாயகத்தில் மாத்திரமன்றி புலம்பெயர்ந்த நாடுகளிலும் வெளித்தெரியக் கூடியதாக உள்ளது.

அரசியலில் நிலவும் வெற்றிடம் அல்லது பொருத்தமான செயற்பாடின்மை என்பது வேண்டத் தகாத சக்திகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை நிரூபிப்பதைப் போன்று தாய்த் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட நாம் தமிழர் கட்சி தற்போது ஈழத் தமிழர்களை இலக்கு வைத்து பிரான்ஸ் மற்றும் சுவிஸ் நாட்டில் தனது கிளைகளை ஆரம்பித்துள்ளது. இத்தகைய கூட்டங்களில் அவர்கள் முன்வைக்கக் கூடிய கருத்துக்களும் விடுதலைப் புலிகள் அமைப்பை 'சற்றே விலகியிரும் பிள்ளாய்" எனக் கூறிவிட்டு அவர்களின் பணிகளை தாமே மேற்கொள்ள இருக்கிறோம் என்ற தொனியில் அமைந்துள்ளன.

ஒரு அரசியல் கட்சி தான் விரும்பிய இடத்தில் கிளைகளை உருவாக்குவதை ஜனநாயகத்தை மதிக்கும் எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், அதன் பொருத்தப்பாட்டை, அவசியத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் தவறில்லை. தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட ஒரு கட்சி, அதற்காகப் பாடுபடும் ஒரு கட்சி புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் மத்தியில் 'கடை விரிப்பது" எந்த வகையில் பொருத்தமானது என்ற கேள்வி எழுகின்றது.

தென்னிந்தியாவில் நடைபெறும் பெரும்பாலான கலைச் செயற்பாடுகளும், தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாடுகளும் புலம்பெயர் ஈழத் தமிழரின் நுகர்வுச் சந்தையை இலக்கு வைத்தே மேற்கொள்ளப் படுகின்றன என்ற விமர்சனத்தை மெய்ப்பிப்பது போன்றே செயற்பாடுகள் நடந்தேறுவதை அவதானிக்க முடிகின்றது. 'உறவினர்களை விடவும் அயலவன் அலறித் துடிப்பதைப்" பார்த்து கேள்விகள் எழுப்பாமல் இருக்க முடிவதில்லை.

நடுக் கடலில் தத்தளிப்பவன் சிறு துரும்பு கிடைத்தாலும் பற்றிக் கொள்வதைப் போலவே, தாய்த் தமிழகத்தில் தமிழீழ விடுதலைக் கோசங்களோடு வலம் வருபவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளும் மனோநிலை புலம்பெயர் தமிழர்களில் பலரிடம் உள்ளது. 2009 ஆம் ஆண்டின் முன்னான சூழலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வீரியம் சேர்ப்பவர்களாகத் தம்மைக் கருதிச் செயற்பட்டு வந்த அவர்கள் தற்போதைய சூழலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தாமே

தலைமை தாங்கி நடாத்திச் செல்ல முனைகின்றனர். 'தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்ற சொலவடைக்கு ஏற்ப நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இத்தகைய போக்கின் பின்னாலுள்ள அபாயத்தை உணர்ந்த ஒருசிலரோ இதனை எவ்வாறு தட்டிக் கேட்பது என்ற வழி தெரியாதவர்களாக அல்லது யாரிடம் முறையிடுவது என்று புரியாதவர்களாக உள்ளனர்.

மறுபுறத்தே, புலம்பெயர் நாடுகளில் அரசியலில் ஈடுபடுபவர்களுக்கும் மக்களுக்குமான இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. 2009 ஆம் ஆண்டின் முன்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் விதத்தில் செயற்பட்டுவந்த பல அமைப்புக்கள் தற்போது தனித்துச் செயற்பட ஆரம்பித்துள்ளன. இதனை வேறு வகையில் சொல்வதானால், தற்போது அரசியலில் ஈடுபடுவோரின் கொள்கைகளை, செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள அவை மறுத்து தனித்துவமான பாதையில் பயணிக்கின்றன எனலாம்.

இதன் விளைவாக, சமூகத்தில் முரண்கள் அதிகரித்துச் செல்கின்றன. ஒற்றைக் கோட்டில் பயணித்தே அனுபவப் பட்டவர்கள் வேறு பாதையில் செல்ல நினைப்பவர்களைக் கண்டு அஞ்சுவதும் அவர்களை நிராகரிப்பதும் தொடந்து கொண்டே இருக்கிறது. மக்கள் தங்களை விட்டு விலகிச் செல்வதால் அச்சமும் அதிருப்தியும் கொள்ளும் அவர்கள் தமது எண்ணங்களை முன்னரை விடவும் ஆக்கிரோசமாகத் திணிப்பதற்கு முயல்கின்றனர். இது ஏற்கனவே நிலவும் விரிசலை மேலும் பெரிதாக்குகின்றது.

இத்தகைய போக்கிற்கு பல உதாரணங்கள் உள்ள போதிலும் அண்மையில் சுவிஸ் நாட்டில் நடைபெற்ற சம்பவம் ஒன்று பலரின் கவனத்திற்கும் கவலைக்கும் காரணமாக அமைந்திருந்ததைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஈழத் தமிழ் நவீன நாடக மரபிற்கு வித்திட்டவரான ஈழக் கூத்தன் ஏசீ தாசீசியஸ் அவர்களின் பவளவிழா அண்மையில் சுவிஸ் நாட்டில் நடைபெற்றமையை வாசகர்கள் பலரும் அறிந்திருக்கக் கூடும். மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் பரத நாட்டிய நடன ஆசிரியை ஒருவர் 'ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற பாடலுக்கு தானே மேடையில் தோன்றி நடனம் ஆடியிருந்தார். விழா நாயகன் ஏசீ தாசீசியஸ் உட்பட பெரும்பாலான பார்வையாளர்களின் இரசனைக்கு இலக்கான இந்த நடன நிகழ்ச்சி ஒரு சிலருக்கு மாத்திரம் அதிகப் பிரசங்கித் தனமாகத் தெரிந்திருந்தது.

'கொடிப் பாடல் எனக் கருதப்படும் பாடலுக்கு எப்படி மேடையில் தோன்றி நடனமாட முடியும்?" என்பதே இவர்களின் கேள்வி. எதன் அடிப்படையில் இவர்கள் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்கள் எனப் புரியவில்லை. ஒரு நாட்டின் மிகப் பெரிய கௌரவத்துக்கு உரிய பாடல் எனக் கருதப்படும் தேசிய கீதத்திற்கே மேடையில் அபிநயம் செய்கின்ற காலகட்டத்தில், தேசிய கீதம் என்ற வரையறையில் கூட அடங்காத ஒரு பாடலுக்கு அபிநயம் செய்வதில் என்ன தவறு இருக்கக் கூடும் என்பதற்கான விடையை மூளையை எவ்வளவு கசக்கினாலும் கண்டு பிடித்துவிட முடியவில்லை. நாடகர், ஊடகர், ஏடகர் எனக் கொண்டாடப்படும் மூத்த புத்திஜீவியான தாசீசியஸ் அவர்களால் கூட இதில் தவறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. மாறாக, தனது ஏற்புரையின் போது அவர் குறித்த நடனத்தை சிலாகித்துப் பேசி சபையினரின் கரவொலி ஓங்கி ஒலிக்கக் காரணமாக இருந்தார் என்பதே உண்மை.

இதில் மற்றுமொரு விடயமும் குறிப்பிடப்பட வேண்டியது. குறித்த நிகழ்வில் ஏசீ தாசீசியஸ் அவர்களைப் பாராட்டுவதற்காக மேடையேறிய இவர்கள் தாங்கள் மேடையேறிய காரியத்துக்குப் புறம்பாக கொடிப் பாடலுக்கான நடனத்துக்கு எதிரான கருத்துக்களைப் பதிவு செய்து மேடை நாகரீகம் சிறிது கூட இல்லாமல் நடந்து கொண்டமை பார்வையாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.


சம்பவம் சிறிதாக இருந்தாலும் கூட அது சொல்ல முனையும் சேதி பாரதூரமானது. வீரபாண்டிய கட்டப் பொம்மன் திரைப்படத்தில் தூக்கிலிடப்படுவதற்கு முன்னான கட்டப்பொம்மனுடனான உரையாடலில் ஆங்கிலத் துரை ஒரு வசனத்தைப் பேசுவது போல அமைத்திருப்பார்கள். 'எரிக்கும் சூரியன் இருக்கிறதே. அது கூட எங்களைக் கேட்டுத்தான் எழும்! விழும்!!" இந்த வசனத்தை நினைவூட்டு வதைப் போன்று அன்றைய சம்பவம் நடந்தேறியது.இது பல்வேறு நிகழ்வுகளில் ஒரு சிறிய எடுத்துக்காட்டு மாத்திரமே. பட்டியலிட நினைத்தால் அது நீண்டு கொண்டே செல்லும்.

கடந்தகாலத் தெளிவும், நிகழ்கால யதார்த்தமுமே எதிர்காலத் தீர்க்க தரிசனத்திற்கு இட்டுச் செல்லும். இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு செயற்படுவர்கள் மாத்திரமே வரலாற்றுச் சக்கரத்தின் சுழற்சியில் தாக்குப் பிடிப்பார்கள். மற்றவர்கள் காணாமற் போய்விடுவார்கள். இதுவே யதார்த்தம்.

இன்றைய காலகட்டத்தின் தேவை யதார்த்த பூர்வமான திறந்த அரசியற் செயற்பாடுகளே. அதனை இதய சுத்தியோடு யார் முன்னெடுக்கிறார்களோ அவர்களே வரலாற்றில் தக்கவைக்கப் படுவார்கள். ஈழத் தமிழ் மக்களின் தூரதிர்ஸ்டம். அத்தகைய எவரையும் நிகழ்காலத்தில் காணமுடியாமல் இருப்பதுவே.

# ImmoFinance
## Suisse GmbH





Contact :
**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch



சூரிச் மாநகரில்
அபிரா
டெக்ஸ்டைல்
திருமணப்பட்டுப்புடவைகள்,
பட்டு வேஷ்டிகள் மற்றும்
புதிய பஞ்சாபி வகைகள்,
சோளி ஹிட் வகைகள்,
சீகுயின்ஸ் சாறிகள்,
புதிய வகையான சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான கோட், சுட்,
சேட், சர்வாணி வகைகள்
அனைத்தும் நீங்கள்
இதுவரையில் எங்கும்
பெற்றுருக்காத வகையில் மிகுந்த
மலிவு விலையில் கொள்வனவு
செய்யலாம்!
பெண்களுக்கான காப்பு, காதணி வகைகள்
மிக மிக மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
Contact:
Stauffacher Str. 149
8004 Zürich
Tel: 043 233 54 54



# பசுமை நிறைந்த நினைவுகள்...
# படித்துக் கிழித்தவரும்!
# கிழிக்காமல் படித்தவரும்!

**வண்ணை தெய்வம்**

ஊரில் எனது இள வயதுக்கால நண்பர்களில் ஒருவன் 'அம்மான் தியாகராசா". சின்ன வயதிலேயே பெரிய மனிதர்கள் போல கதைப்பதால் இவனை நாங்கள் அம்மான் என்றே அழைப்போம். பள்ளிக்கூடம் போவதென்றால் இவனுக்கு கொலைக்களத்திற்குப் போவதைப்போல! அனேகமாக கிழமையில் இரண்டு நாள், மிஞ்சிப்போனால் மூன்று நாட்கள்தான் பள்ளிக்கூடம் போவான். மற்றய நாட்களில் எங்கள் அயலிற்கு அருகில் உள்ள 'தலையாழி" என்னும் இடத்தில் உள்ள கொய்யாக் காட்டிற்குச் சென்று கொய்யா மரத்தில் ஏறி இருந்துவிட்டு பள்ளிக்கூடம் விடும் நேரத்திற்கு வீட்டிற்கு வருவான்.

பள்ளிக்கூடம் வரும் நாட்களில் அன்று வாத்தியார் புத்தகத்தில் படிப்பித்த பாடங்களின் பக்கத்தை பள்ளிக்கூடம் விட்டு வீடு வரும்போது வழியிலேயே 'இது படிச்சு முடிஞ்சுது" எனச் சொல்லிக்கொண்டே கிழித்து எறிந்து விடுவான்! இவனை நாங்கள் படித்துக் கிழித்தவன் என்றும் அழைப்போம்.

பாரிஸில் எனக்கு ஒரு நண்பர் இருக்கின்றார் (பெயரைத் தவிரித்து விடுவோம்) இவர் ஒரு புத்தகப் பிரியர்! இவர் வீட்டில் உள்ள புத்தக அலுமாரியைப் பார்த்தால் எனக்குப் பொறாமை வரும்! ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, முதல் தத்துவம், ஆன்மீகம், அரசியல் என தேடப்படும் மிகவும் அரிய புத்தகமெல்லாம்; இவரது சேகரிப்பில் இருக்கின்றன! அனேகமாக அனைத்துப் புத்தகங்களும் புத்தம் புதியவையாகவே இருக்கும்.

நான் இவரிடம் புத்தகங்கள் இரவல் வாங்கிப் படிப்பதுண்டு. சிலர் புத்தகங்கள் இரவல் கொடுக்கமாட்டார்கள். இவரோ கேட்டவுடன் தந்துவிடுவார்! காரணம் தன்னிடம் இப்படியான புத்தகங்கள் இருக்கின்றது என்பதைக் காட்டிக்கொள்வதற்காக!.

ஒரு நாள் பாரி;ஸில் உள்ள புத்தகக் கடைகளில் இல்லாத (புளட் இயக்கத்தின் உட் பூசல்களை

அம்பலப் படுத்திய) 'புதிய பாதை" என்னும் புத்தகத்தை இவரிடம் பெற்றிருந்தேன். புத்தகத்தைத் தரும்போது 'வண்ணை இதை நீர் கண்டிப்பாக படித்திருக்க வேணும்" என்று சொல்லி அந்தப் புத்தகத்தை எழுதியவர்களைப்பற்றியும் புத்தகத்தைப் பற்றியும் சுமார் அரை மணிநேரம் எனக்கு விளக்கம் சொல்லிவிட்டுத்தான் புத்தகத்தையே கையில் தந்தார். அவர் சொன்ன விளக்கத்தில் இருந்து இவர் இந்தப் புத்தகத்தை இரண்டு மூன்று தடவைகளாவது படித்திருக்க வேண்டுமென எண்ணிக்கொண்டேன்.

வீட்டிற்கு வந்து புத்தகத்தைப் படிப்பதற்காக பக்கங்களைப் பிரட்டும்போதே புதுப் புத்தகத்தின் மடமடப்பு மாறாமல் இருப்பதை உணர முடிந்தது. படித்துக்கொண்டு செல்லும்போது உள்ளே பிரிக்கப்படாத சில பக்கங்களும் இருந்தன! (சில சமயங்களில் வெட்டுப்படாமல் இரண்டு ஒற்றைகள் மடிபட்டபடியே இருப்பதும் உண்டு. அதை நாம்தான் படித்துக்கும்போது பிளேட், அல்லது கத்தியால் கிழித்துவிட்டு படிக்கவேண்டும்.) பக்கங்களைப் பிரிக்காமல் இவர் எப்படிப் படித்திருப்பார் என எண்ணிய நான் பின்னர்தான் புரிந்து கொண்டேன் நண்பர் எனக்கு படித்தது போல றீல் விட்டிருக்கின்றார் என்று.

ஊரில் படித்துக் கிழித்த நண்பனையும், இங்கு கிழிக்காமல் படித்த நண்பனையும் நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை

ASI Boucherie

PARIS-FRANCE



இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

வாடிக்கையாளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்

தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்

இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்

ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.

சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்

மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!

அன்பான வரவேற்ப! தினமும் பதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.

இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக்
கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்

ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ
கிலோ 4,20€

தினமும் ஆட்டுப்பங்கு

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord


Gopara Gnanam GmbH
ESTD 1992
9வது ஆண்டில்
திருமணம் பூப்புனித நீராட்டு விழா
நிச்சயதார்த்தம் இவைகளுக்கு
தேவையான அனைத்துப்
பட்டுப் புடவைகளையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்!
இசைக்கருவிகள் ஏகாந்த
வீணை மிருதங்கம் தபேலா
சுருதிப் பெட்டி பரதநாட்டிய
பொருட்கள் அனைத்தும்
கிடைக்கும் ஒரே இடம்!
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Rheinische Straße 81, 44137 Dortmund
Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542





( நிறைவுப் பகுதி )

# தனிமனிதன் வெறும் மனிதனல்ல

ஏலையா க.முருகதாசன்

மழை என்பதில் துளி என்பது அடங்கியிருக்கும், ஒவ்வொரு துளியுமே ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரும் போதுதான் அது மழையாகிறது. அதுவே வடிந்தோடும் நீராகின்றது வெள்ளமாகின்றது. சமூகம் என்ற மனித வெள்ளத்தில் துளித்துளியாகவும் துளியை உருவாக்கியிருக்கும் பலவாயிரம் கோடி அணுக்கள் போன்று இருப்பவனும் தனித்தனி மனிதர்களே.

வரலாறு, வரலாற்றுக்குரியவர்களின் சமகாலத்தை பன்மையிலே குறிப்பிடும் போது அதில் தனிமனிதன் ஒவ்வொருவனும் பங்குபெறுகிறான்.

இயற்கையின் படைப்பை அணுவணுவாக ஆராய்ந்ததில் ஒவ்வொரு பொருளின் தோற்ற வெளிப்பாடுகள் யாவும் ஒவ்வொரு சிறுசிறு அணுக்களின் (கலன்கள்) கூட்டமைப்பே ஆகும் என்பது விஞ்ஞானத்தால் நிறுவப்பட்ட உண்மையாகும். எமது உடலும் அது போன்றதே. மனித சமூகமும் அது போன்றதே.

ஒரு இனத்தின் வரலாற்றுக்கு அணுக்களின் கூட்டமைப்பு போன்று இருக்கும் ஒவ்வொரு தனிமனிதனுமே பொறுப்பாவான். தனிமனிதன் இல்லையேல் மன்னர்களின் வரலாறும் இல்லை, அது கடந்து வந்த இன்றைய ஆட்சிகளின் வரலாறுகளுமே இல்லை.

தனிமனிதன் என்பவன் கல்விமானாகவோ, சிந்தனைவாதியாகவோ, மக்களுக்கு வழிகாட்டுபவனாகவோ, ஒரு அரசியல்வாதியாகவோ, ஒரு நாட்டின் தலைவனாகவோ, பொது வாழ்வில் ஈடுபடுபவனாகவோ, கலை இலக்கிய வாதியாகவோ இருந்தால் மட்டுமே அவன்தான் சமூகத்திற்குரியவன் என்ற கருத்து விதந்துரைக்கப்படுமானால் அது முற்றிலும் தவறு.

இவை எதுவுமேயில்லாது மிகவும் இயல்பு வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவனால் தான் சிந்தனைவாதியின் சிந்தனையையோ, மக்களுக்கு வழிகாட்டுபவனின் வழிகாட்டுதலையோ,ஒரு அரசியல்வாதியின் அரசியல் சித்தாந்தந்தையோ கோட்பாடுகளையோ,ஒரு நாட்டின் தலைவனாக இருக்கும் தலைமையின் தலைமைத்துவத்தையோ, பொதுவாழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவனின் அணுகுமுறை நடவடிக்கைகளையோ,கலை இலக்கியவாதிகளின் பங்கையோ ஒரு சமூகம் அல்லது இனம் உள்வாங்குகிறதென்றால், சமூகம் அல்லது இனம் என்ற குழுத்தன்மையின் அணுக்களாக இருப்பவர்கள் தனிமனிதர்கள் என்பதற்கமைய உள்வாங்கலுக்குரியவனாக இருப்பவன் தனிமனிதனேயாகும்.

தனிமனிதன் தான் சமகாலத்தில் உள்வாங்கியதை அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்லுகிறான்.தானும் தன் குடும்பம் தன் வேலையென்று இருப்பவனைப் பார்த்து "வெறும்பயல்" என்று கூறுவது தவறானதே.
ஒவ்வொரு மனிதனும் தான் உட்பட சமகால மனிதர்களை கூர்ந்து கவனித்தானேயானால் மனிதகுலத்தின் அசைவை அவனால் உணர முடியும்.

ஆண் பெண் உடலுறவு முறையினாலே தான் அடுத்தடுத்த பரம்பரையை உற்பத்திச் செய்ய முடியும். ஒவ்வொரு தலைமுறையும் கடந்த காலத்தில் உள்வாங்கிக் கொண்ட சேகரித்துக் கொண்ட அறிவியலுக்கு (கல்வியியல்) ஏற்றவாறு இந்த உலகத்தை வளர்ச்சியடையச் செய்து கொண்டு வருகிறார்கள்.

சமுதாயத்தின் கவனிப்புக்கும் அவர்களின் கருத்துக் கணிப்புக்கும் உட்பட்டவர்களாக இருப்பவர்களைத் தவிர்ந்த மனிதர்களே உலக வளர்ச்சிக்கு ஊடாகமாக இருக்கின்றனர்.

வாய்வழி மூலமாக கேட்டறிந்து சிலை எழுத்துக்கள் மூலம்(கல்வெட்டுக்கல்) பதிவு செய்து, ஏட்டில் தொடங்கி இன்றைய கணிணி யுகம் வரையும் பல்லாயிரம் ஆண்டுகளை அந்தந்த காலங்களை நினைவு படுத்தி, கேட்டவற்றை உள்வாங்கி அந்தந்த காலத்திற்குரிய

எடுகோள்கள் வழியாக பதிவு செய்து ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாற்றுநிலை பரிணாமம் பெற்ற நீட்சியாகி வளர்ந்துள்ளது என்றால் அதற்குக் காரணம் தனிமனிதர்களேயாவர்கள்.

சமூகத்தின் கவனிப்புக்குட்டபட்டவர்ளின் செயல்பாடுகளை உள்வாங்கி அதனை தமது பிள்ளைகளுக்கு(அடுத்த சந்ததிக்கு) கற்பிக்க வைத்து பின்னர் கற்பிக்க வைத்தவர்கள்(பெற்றோர்கள் என்ற ஊடக நிலை எய்தியதாக) தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்க வைத்தும் இவ்வாறாக தொடர்ச்சியாக சமூகத்தின் உற்று நோக்கப்படாத மனிதர்களால் இப்பணி தொடர்கிறது, தொடர்ந்து கொண்டேயிருக்கப் போகின்றது.

மேடைப் பேச்சாளன் தனது ஆற்றல் மூலம் தன்னை வளர்த்துக் கொண்டாலும் கேட்போருக்காகவே அவன் பேசுகிறான். கேட்போர் என்பது ஒவ்வொரு தனிமனிதனுமே. பேச்சாளன் ஒருவன் ஒவ்வொரு தனிமனிதனிலும் தங்கியிருக்கிறான். கலை நிகழ்ச்சிகளை அளிப்பவர்கள் கூட அதனை இரசிக்கின்ற இரசிகர்களின் உள்வாங்களிலேதான் அவர்களின் கலைத்திறமைகள் அபிவிருத்தியடைகின்றன.

எழுத்தாளன் தொடர்ச்சியாக எழுதுவதற்கும் தனது எழுத்துக்களில் மெருகினை ஏற்றுவதற்கும் வாசகனான தனிமனிதனே காரணமாகிறன். வாசகன் இல்லையேல் எழுத்தாளானின் எழுத்து வளர்ச்சி நகர்வை நோக்கிச் செல்லாது. வாசகன் என்பவன் தனி மனிதனே.சபையோர் என பெயர் கொண்டு சபையோராக இருக்கும் தனித்தனி மனிதர்கள் இல்லையெனில் விழாக்களையே நடத்த முடியாது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி பிரமிக்க வைக்கின்றது. மனித வாழ்க்கைக்கு தேவைப்பட்டதான நிலைக்குட்பட்ட அத்தனை கண்டுபிடிப்பகளும் உலக மனிதர்கள்; மத்தியில் பரவியும் விரவியும் கிடக்கின்றன. இவற்றின் பாவனையாளர்களாக இருப்பவர்கள் மக்களேதான்.விஞ் ஞானக் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தும் மனிதர்கள் தனித்தனி மனிதர்களே.

ஒவ்வொரு தனிமனிதனும் பொருளாதாரம், கலை இலக்கியம்,விஞ்ஞானம், பல்துறை அபிவிருத்திகள் (இவை எல்லாமே கல்விசார் அடித்தளம் கொண்டவையே) எனக் கொண்ட கட்டமைப்புக்கள் யாவும் தனிமனிதனுக்காக உருவாக்கப்பட்டவையே.எனவே தனிமனிதனிலேதான் உலக இயக்கமே தங்கியிருக்கின்றது.

நாளாந்தம் நாம் காணும் சக மனிதர்கள் எமது பார்வைக்கு சாதாரண மனிதர்களாகத் தோன்றினாலும், அவர்கள் ஒவ்வொருவரையும் ஆராய்ந்து பார்த்தால் அவர்களே இயங்கு சக்தியாக இருப்பார்கள்.

எனவே"இவனென்ன, இவளென்ன" என்ற அலட்சியப் பார்வை தவறானதே.ஒவ்வொரு தனிமனிதனும் வெறும் மனிதனல்ல மிகப் பெறுமதிமிக்க மனிதனே.அணுசக்திக்கு சமனானவன்.




Lyca TV

## உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்



ஒரு வருட இணைப்புச் சந்தா

CHF 119

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

15 மாதங்கள் CHF 119

## 50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள் INDIA UK EUROPE



## 7000க்கும் அதிகமான புத்தம் புதிய TAMIL & HINDI திரைப்படங்கள்

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

SALES 077 955 9430

CUSTOMER SERVICE 044 555 2320

www.lycatv.tv



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

பாகம் 3

எல்லா நாடுகளுமே மற்றைய நாடுகளின் சமூக, பொருளாதார, நிர்மாணக் கட்டமைப்புகளை அறிந்து கொள்வதையே உளவு பார்த்தலின் அடித்தளமாகக் கொண்டுள்ளன. இதற்காக அறிவுஜீவிகள் அடங்கிய குழுக்கள் கட்மைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டமைப்புகளே பல பிரிவுகளாக கட்டமைக்கப்பட்டிருக்கும்.

அந்தந்த நாடுகளில் அந்தந்த நாட்டிற்குரிய மக்கள் மட்டுமல்ல,அந்நாடுகளில் வாழுகின்ற வெளிநாட்டினரையும் உளவு பார்க்கும் வேலைக்காக அதற்குரியவர்களை சல்லடை போட்டுத் தேடுவது போல தகுதியானவர்களைத் தேடி எடுப்பார்கள்.

தமது உளவு பார்க்கும் வேலைக்கு இவர்கள் பொருத்தமானவர்களா என பல தேர்வுகள் ஊடாகவே அவர்களை அவ்வேலைக்கு அமர்த்துவார்கள்.

இவர்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு பணி சார்ந்தவர்களாக அனுப்பப்படுவார்கள். உளவு பார்த்தலுக்கு வெகுசனப் பிரியத்தைக் கொண்ட வல்லரசு நாட்டின் உணவகங்கள் ஊடகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வுணவகங்களின் அதிகாரிகள் பணிசார் நிலையில் அதற்குரியவர்களாகக் வெளிப்படையில் தெரியப்பட்டாலும் அவர்கள் தமது நாட்டுக்காக இரகசியங்களை சேகரிப்பவர்களாகவும் வேலை செய்வார்கள்.

உளவு பார்க்கும் வேலை நேர்மைக்கு முற்றிலும் எதிர்மாறானது என்பது உளவறியும் நிறுவனங்களின் செயல்பாடுகளை அறிந்து கொண்ட பொதுமக்கள் அதிருப்திப்படலாம். ஆனால் தனது நாட்டின் நிறுவனம் பணி; ரீதியாக இன்னொரு நாட்டில் செயல்படும் வேலையில், அந்த நாட்டின் இரகசியங்களை சேகரிப்பதில் விருப்புடனேயே அவர்கள் செய்வார்கள். தமது நாட்டுக்காக தாம் செய்யும் கடமை என தேசியப் பற்றுடன் அவர்கள் உளவு பார்க்கும் பணியைச்; செய்வார்கள்.

அந்தந்த நாட்டு மக்களையோ அல்லது தனது நாட்டு குடிமகனைக் கொண்டோ இன்னொரு நாட்டின் இரகசியங்களை அறிந்து கொள்வது தவறு என்ற வாதம் இப்பணி மீதான கருத்தியலால் வலுவிழந்து விடுகின்றது. சரியே என்பது வலுப்பெற்று விடுகின்றது.

வெகுஜன ஊடகங்கள் வழியாக விநாடிக்கு விநாடி புதிய புதிய செய்திகளை மனித குலம் அறிந்து கொள்ளுகின்ற வசதியை விஞ்ஞான வளர்ச்சி எமக்கு கொடுத்து இருக்கின்றது அதனால் ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, நிர்மாண கட்டமைப்புகள் மீதான தாக்கங்கள் அந்த நாட்டிற்குள்ளேயே அந்த நாட்டு மக்களால், அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அமையவே ஏற்படுகின்றன என்று சொல்வதற்கில்லை. அவை ஒற்றர்கள் (உளவாளிகள்) மூலமும் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்த உளவுப் பணி இன்றைய உலகில் மட்டுந்தான் இடம் பெற்றிருக்கின்றது என்று எண்ணிவிடுதல் மிகத் தவறாகும்.

ஒற்றர்களை அனுப்பி இன்னொரு நாட்டின் இரகசியங்களை அறிந்து கொள்ளும் பணி மன்னர் காலத்திலிருந்தே தொடர்கின்றது.மன்னர் காலத்து ஒற்றர்கள் வெற்றிகரமாக தமது பணியைச் செய்துமிருக்கிறார்கள், அதே வேளை பலவாயிரம் ஒற்றர்கள் பிடிபட்டு சிறைத் தண்டனையையும், மரண

தண்டனையையும் பெற்றுமிருக்கிறார்கள்.

ஒற்றர்களை மீட்பதற்காக ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது போர் தொடுத்துமிருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் மனிதகுல ஆரம்ப நிலையான காட்டு வாழ்க்கையின் போதுகூட காடுகளில் குழுக்கள் குழுக்களாக வாழ்ந்த மக்கள் கூட்டங்களே இன்னொரு குழுக்களின் நடவடிக்கைளை இரகசியமாக அறிந்து கொள்ளும் பணியைச் செய்தன.

அவை பெரும்பாலும் உணவுக்கான ஒற்றர் பணியாக இருந்திருந்தாலும் அங்கிருந்து ஆரம்பித்ததுதான் இந்த உளவு பார்க்கும் வேலை.

ஒரு நாட்டின் மீதான உளவு பார்க்கும் பணியில் வல்லரசு நாடுகள் தமக்குரிய இலக்கை சுலபமாக அடைவதிலும் பல தடைகள் உண்டு.

தமது நாட்டுக்கு விசுவாசிகளாகவும் தேசிய உணர்வுடன் இருக்கும் ஒரு குடிமகனே இதற்கு தடையாக இருப்பான். தனது நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பது அவனுடைய இரத்தத்தோடு கலந்ததாக சுவாசத்தோடு கலந்ததாக இருக்கும். எந்தச் சூழ்நிலையிலும் அவன் தன் நாட்டுக்கு துரோகம் செய்யாமலே இருப்பான்.

ஆனால் ஒரு நாட்டின் ஒட்டுமொத்த குடிமகன்களும் தேசியப் பற்றோடு இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது.நூறு வீதம் என்பது சாத்தியப்படாதது மட்டுமல்ல, அந்நிலைப்பாடு எங்கும் எதிலும் இல்லை.

உளவு பார்த்தலில், அந்தந்த நாடுகளின் உள்ள மனிதர்களின் பண்பாட்டு விழுமியங்களும், குணவியல்புகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு நாட்டின் மொத்த சனத்தொகையும் சிறப்புடன் வாழ்தல் என்பதைக் கண்டறிவதில் உளவு பார்க்கும் நாடுகள் அதிக அக்கறை காட்டுகின்றன.

ஒரு நாட்டின் அனைத்துக் கட்டமைப்புகளிலும் பணி செய்யும் பணியாளர்கள் பணிக்குரிய பெயருடன் அழைக்கப்பட்டாலும் அவர்களும் சாரசரி மனிதர்களே. வேதியியல் மூலகங்களால் உருவாக்கப்பட்ட மனித உடல்கள் அனைத்து உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கொண்டதாகவே இருக்கும். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் விருப்பு வெறுப்புக்களும் ஆசைகளும் வேறு வேறு விதமாகவே இருக்கும்.

உலக மக்கள் அனைவரினதும் பழக்க வழக்கங்களோ பண்பாட்டு விழுமியங்களோ விருப்பு வெறுப்புக்களோ ஆசைகளோ ஒரே மாதிரியாக இருக்கவே இருக்காது. நாட்டுக்கு நாடு வேறுபடும். இந்த வேறுபாட்டையும் அந்தந்த நாட்டு தனிமனிதர்களின் அகத்தையும் புறத்தையும் அறிந்து கொள்வதே உளவு நிறுவனங்களின் பிரதான பணியாகும்.

தனித்தனி மனிதர்களை இந்நிறுவனங்கள் மிகத் தெளிவாக ஆய்வு செய்கின்றன. பல்வேறு ஒத்த குணங்களுடையவர்களை தமது பார்வை என்ற வலைப்பின்னலுக்குள், தனித்தனி வலைப்பின்னலுக்குள் உளவு நிறுவனங்கள் கொண்டு வந்து விடுகின்றன.

வெளிநாடுகளில் தனது பணிசார் நிறவனங்களை நிறுவியுள்ள நிறுவனங்களில் உணவுக் கடைகளும் உளவு பார்த்தலில் பெரும் பங்கு வகிக்கின்றன.

தமக்கு விருப்பமான உணவை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளும் ஒருவன் வெகு விரைவில் அந்தக் கடையில் தயாரிக்கப்படும் உணவுக்கு இசைவாக்கம் பெற்று அதற்கு அடிமையாகிவிடுவான். இவ்வாறு அடிமையாகி விடுபவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து அதிகாரிகள் வரை இருப்பார்கள்.

ஒரே குணவியல்பு கொண்டவர்களுக்கிடையில்கூட மிக நுண்ணிய வேறுபாடுகள் இருக்கும். இந்த நுண்ணிய வேறுபாடுகளையும் உளவு பார்க்கும் நிறுவனங்கள் மிகவும் உன்னிப்பாக கவனித்து தனக்குத் தேவையான இரகசியங்களை பெற்றுக் கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரியையோ அல்லது சாதாரண பணியாளர்களையோ மெதுவாக உளவு நிறுவனங்கள் அணுகத் தொடங்கும். (தொடரும்)

ஜேர்மனியில் தரம், உத்தரவாதத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் நிறுவனம்.

**R. Ragunathan**
Parkhof Str. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

ஆசியா சமுத்திரம்
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388
Fax: 02161 9028399

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

TJB BROTHERS

SUN TV மற்றும் VIJAY TVயின் விநியோகிஸ்தர்

VIJAY

Bank Details: R.Ragunathan
IBAN: DE55 3907 0024 0474 1153 00 | BIC: DEUT DE DB 390


அனைத்து
பொருட்களும் எங்கள்
சொந்த தயாரிப்பு
தரமான பொருட்கள்
மலிவு விலையில்
AKM
IMPORT
தரமான பொருட்கள்
மலிவு விலையில்
கலப்படங்கள் எதுவும்
AKM ASIAN FOOD GmbH
ALPENSTRASSE 1
3072 OSTERMUNDIGEN
CH-BERN-SWITZERLAND
TP:031 931 25 25/078 802 72
www. Akmasian.com
இன்றி சுத்தமாக
தயாரிக்கப்பட்டது
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
விறகடுப்பில் தயாரிக்கப்பட்டது
Alpenstr.1,
3072 Ostermundigen
Tel. 031 9312525
(Bern Nilavani)
Basel Str. 80,
6003 Luzern
Tel. 041 2405400
ROASTED RED RICE FLOUR
GERÖSTETES REISMEHL
தமிழர்களுக்கு தேவையான அனைத்து
விதமான உணவுப் பொருட்களின் மொத்த,
சில்லறை விற்பனை நிலையம்
A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால்
ஈழத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!

# SwissLife
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக
கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால்,
காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று,
மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர்
ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிசில் சொந்த வீடு வாங்க
விரும்பும் உறவுகளே, அவதானமாகச்
செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி
வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரம் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம்...

## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு
ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம்
காப்புறுதி செய்து தருகிறோம்.
















**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**
**eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch**
**Internet: www.swisslife-select.ch**



# போரைத் தீர்மானிப்பது யார்..?

தேவன்

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தை அணுகினால், இப்போதுள்ள சூழ்நிலையில் வடகொரியா பற்றியதான பதற்றம் அங்கே நிலவுவதைக் காணமுடிகிறது. அமெரிக்காவின் தேசியப் புலனாய்வுத்துறை இயக்குனர் டானியல் கோட்ஸ், அதைப்பற்றிக் கவலைப்படும் நபர்களில் ஒருவராக இருக்கிறார். வட கொரியா தற்போதுள்ள சூழ்நிலையில் மிகவும் பழமை வாய்ந்த, ஆனால் பாரதூரமான இருபதுக்கும் மேற்பட்ட அணுகுண்டுகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதாகக் கூறுகிறார். அவர் பழமை என்று குறிப்பிடுவது எவ்வளவு தூரம் ஆபத்தைத் தவிர்க்கும் என்று தெரியவில்லை. அந்த அணுகுண்டுகளைக் காவிச் செல்லும் தொழில்நுட்பம் அவர்களிடம் இல்லை என்றும் குறிப்பிடுகிறார்.

பல ஊடகங்கள் இப்போது வடகொரியாவையும் தென்கொரியாவையும் ஒப்பிட்டு எழுதத்தொடங்கியுள்ளன. தென்கொரியாவின் எல்லையில் இருந்து நோக்கினால் வடகொரியா ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியான இருண்டகண்டம் என்று சொல்லப்படுகிறது. அமெரிக்க மற்றும் மேற்குலக வாணிபச் சந்தையாகத் தென்கொரியா மாறியதன் காரணத்தால் மிகவும் வளர்ச்சியுற்ற நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேற்குலகின் எந்தப் பொருளுக்கும் வட கொரியாவில் இடம் இல்லை. இணையத்தின் இன்றைய உச்சநிலை ஊடகங்களான முகநூல் மற்றும் டுவிட்டர் ஆகியனவற்றிற்குக் கூட அங்கே அனுமதியில்லை. உண்மையில் மேற்குலகும் அதன் ஊடகங்களும் வடகொரியாவை ஒரு சிறைச்சாலை போலக் காட்டுவதற்கான அடிப்படை இதுதான்.

கடந்த வருடத்தில் அமெரிக்காவின் உள்நாட்டு வருமானம் 19 ட்ரில்லியன் டொலர்கள். வடகொரியாவின் உள்நாட்டு வருமானம் அமெரிக்காவின் வருமானத்தை 650 ஆல் வகுக்க வரும் ஒரு பங்கு மட்டுமே. அதே போல வடகொரியாவின் பரப்பளவில் பதின்மூன்று மடங்கு பெரியதாக அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்க இராணுவமும் அதன் பலமும் வடகொரியாவை விட 100 மடங்குக்கும் அதிகமான பலம் கொண்டவை. இந்த நிலையில், எந்தத் தைரியத்தில் வடகொரியா போரை முடுக்க ஆயத்தமாகிறது என்ற கேள்வி எழுகிறதல்லவா..?

அமெரிக்க மக்களிடம் நடத்தப்பட்ட ஆய்வொன்றில், இந்தப் போரில் அமெரிக்கா பேரழிவைச் சந்திக்கும் என 37 வீதமான மக்களும், உடனடியாகத் தமது இராணுவத்தை அனுப்பி வடகொரியாவைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டுமென 67 வீதமான மக்களும் வேண்டுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆய்வின் அடிப்படை என்னவெனில், அமெரிக்க மக்களின் விருப்பப்படியே இந்தப் போர் நடத்தப்படுகிறது என்று சொல்லாமல் சொல்லப்படுகிறது. உண்மையில் பன்னாட்டு வர்த்தக முதலைகளின் திட்டப்படியே இந்தப்போர் நடைபெறுகிறது என்பதைச் சாமானியனும் புரிந்துகொள்வான்.

இதுவரை நாட்களும், பயங்கரவாதத்தைக் குற்றம் சாட்டியபடி , கெயிட்டி, பனாமா, லிபியா, ஆப்கானிசுதான், ஈராக் ஆகிய நாடுகளில் தனது போரை நடாத்தி வளங்களை அபகரித்துக்கொண்டது அமெரிக்கா. இந்தப் போரை நடாத்துவதற்கு மிகப்பெரிய நிதியுதவி வர்த்தகப் பணமுதலைகளிடமிருந்து வழங்கப்பட்டது. போரை நடாத்துவது தொடக்கம், அந்தந்த நாடுகளில் அழிவை ஏற்படுத்துவது வரைக்கும் அமெரிக்க இராணுவம் குத்தகைக்குச் செயற்பட்ட படை மட்டுமே. இப்போதெல்லாம் அவர்களை வாடகைக்கு அமர்த்த முடியும் என்ற நிலை வந்துவிட்டது. அவர்களை வாடகைக்கு அமர்த்தி யார் யார் எல்லாம் சம்பாதித்துக் கொள்கிறார்கள் என்று இங்கே நேரடியாகச் சொல்லமுடியாது. ஆனால் நான் சொல்லப்போகும் ஒருவிடயத்தில் இருந்து டுடுஇவர்களும் அவர்கள்

ஆட்களா... என நீங்கள் சிந்திக்கக்கூடும். கடந்தவருடம் உக்ரேய்ன் நாட்டின் எல்லை வரை இரசியா தனது படைகளை நகர்த்தியது உங்களுக்கு நினைவிருக்கக்கூடும். காரணம், அங்கே ஒரு மக் டொனால்ட்சு சிற்றுண்டிச்சாலை கிளர்ச்சியாளர்களால் உடைக்கப்பட்டதை அடுத்து, அமெரிக்கா அங்கே தனது படையை ஊன்ற ஆரம்பித்ததை அடுத்தே இரசியா சுதாரித்துக்கொண்டது. அப்படியானால் ஒரு சாதாரண மக் டொனால்ட் சிற்றுண்டிச்சாலை மூலம் அமெரிக்கா எந்தெந்த வழியில் பயனடையும் என நீங்களே சிந்தித்துக்கொள்ளுங்கள்.

முதலில் ஈரான் மீதான குறியையே அமெரிக்கா வலுப்படுத்தி வந்தது. அங்கே அணுகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன என்று ஓலமிட்டது. ஆனால், அங்கே கைவைத்தால் தமக்கான மசகு எண்ணெய் வியாபாரம் பாதிப்படையும் என்று புரிந்துகொண்ட பின்னரே வடகொரியா மீது இப்பொழுது போர் திட்டமிடப்பட்டது. காரணம், சீனாவும் இரசியாவும் வடகொரியாவைச் செல்லமாகக் கண்டித்தாலும், பின்னணியில் நிற்பதும் அவர்களே என்று அமெரிக்கா அறியாமல் இல்லை. இந்தப் போர் எப்பொழுதோ ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே உண்மை. ஆனால் போரில் வெற்றிபெற்ற பின், அந்தப் பிராந்தியத்தில் சீன ஆதரவின்றி நிலைத்து நிற்கமுடியாது என்பதும் அமெரிக்காவின் மாபெரும் தலைவலி. குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு விட்ட கதையாக மாறிவிடக்கூடாது என்பதே அமெரிக்காவின் இன்றைய கவலை.

**அமெரிக்கப் பானங்கள், துரித உணவுகள், அமெரிக்காவின் சிகரெட்டு, கணனி மற்றும் இலத்திரனியல் பொருட்கள், ஊர்திகள் மற்றும் இணையப் பயன்பாடு ஆகியவனவற்றை விற்பனை செய்ய வட கொரியா விதித்திருக்கும் தடையே இந்தப் போருக்கான அடிப்படை.**

உண்மையாக நோக்கின், வடகொரியாவை விடவும் பலமடங்கு ஆபத்து நிறைந்த அணுகுண்டு வகைகளை சீனா, இரசியா மற்றும் ஈரான் ஆகியன வைத்திருக்கின்றன. இவற்றில் சீனாவும் இரசியாவும் வீட்டோ அதிகாரம் கொண்டவை. இந்த இரண்டு வீட்டோ அதிகாரமே கொண்ட நாடுகளும், வடகொரியாவை வைத்து தனது மூக்கைக் காயப்படுத்துகின்றன என்பதே அமெரிக்காவின் கோபம். விரும்பியோ விரும்பாமலோ இந்தப் போர் தன்மீது திணிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது ஒரு பக்கமாகவும், இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் தான் அஞ்சமாட்டேன் என்று நடிக்க வேண்டிய நிலை மறுபக்கமாகவும் வாட்ட, இருதலைக்கொள்ளி எறும் போன்று அமெரிக்கா என்ற பெயரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

மூலம் : Nationalinterest.org, The Guardian




# BCN·TRAVELS

Consulting Network

*Travels·Business·Worldwide*

## விமானச் சீட்டுக்கள் சிறப்பு விலையில்... எம்மிடம்

**Rheinischestr. 72,**
**44137 Dortmund**
**Tel.: 0231/10876361**

**Öffnungszeiten: Mo-Sa 09:00-20:00 Uhr**

Last minute Tickets available
on Sunday and Holidays

துரித
பணமாற்றுச்
சேவை

VALUTRANS MONEY TRANSFER

TEMPO

BALU ASIAA

Ria

## நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!

## வீட்டுக்கடன்

# 1,2%

வட்டிவீதத்திலிருந்து
பெற்றுத் தரப்படும்

**50.000 - 122.000 யூரோ**


அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீயான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!

மற்றும் எம்மிடம் அனைத்து விதமான காப்புறுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:
**gothab Finance**
Rheinische Str. 72, 44137 Dortmund
**0231/53375365**
**0231/10876361**
**0152/53961138**
Th. Gobinath

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

**பாகம் 68**



-அன்புச் செல்வன்-

ஒருமித்த பிரிக்கப் படாத இலங்கையில் இனவெறி கொண்ட அரசுகளின் கீழ் தமிழ் இனம் இனியும் வாழ முடியாது வாழக் கூடாது. காட்டிக் கொடுத்து அழிவுகளை ஏற்படுத்திய அரசியல் இன்னமும் ஒரு தேசம் ஒரு மக்கள் ஒரு இனம் எனச் சொகுசுக் கார்களுக்கும் சுக போகங்களுக்கும் மக்களை விற்பனை சரக்காக தான் தோன்றித் தனமாக மீண்டும் இனவெறி அரசமைப்பின் கீழே தள்ளி விற்று விடத் துடிக்கிறார்கள்.

சமஷ்டி ஆட்சி கூட ஒரு சமத்துவ நோக்குடன் கூடிய மக்களிடையேதான் அமைதியும் நீடித்து நிலைக்கும் ஆட்சியும் சாத்தியமாகும். ஆனால் இன்றுள்ள உலக இயங்கியலில் மகா பாரதத்தில் கண்ணன் 5 வீடுகளைக் கேட்டது போன்று சமஷ்டிக் கோரிக்கை அவசியமாகத் தேவைப் படுகிறது. அப்படி ஒரு சமஷ்டி முடிவானாலும் தமிழ் மக்களின் இறையாண்மை மற்றும் பிரிந்து செல்லும் உரிமைகளுடன் ஏற்படுத்தப் படும் ஆட்சி அமைப்புதான் நீடித்த நிலையான அமைதியை வாழ்வை தமிழ் மக்களுக்கு உறுதி செய்ய முடியும்.

ஒற்றை ஆட்சிக்கே பட்டாப் போட்டுக் கொடுக்கத் துடிக்கும் சம்பந்தன் சுமந்திரன் மாவை போன்றோருக்கு மத்தியில் வட மாகாண முதலமைச்சர் திரு.விக்கினேஸ்வரன் 13ம் திருத்தமும் வேண்டாம் சமஷ்டியை நீதிமன்றமே பிரிவினை அல்ல எனத் தீர்ப்பளித்து விட்டதால் அதுவே தமிழ் மக்களின் கோரிக்கை என பௌத்த மத பீடாதியிடமே கேட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கை நிச்சயமாக முற்றாக நிராகரிக்கப் பட்டு விடும். அப்படியானால் தமிழினத்தின் அடுத்த கட்ட இறுதித் தெரிவாக தனித் தமிழ் ஈழத்தை தவிர வேறு தெரிவே இருக்க முடியாது.

இது பற்றிய ஒரு விமர்சனக் கட்டுரையில் 2007 முதல் 2009 வரை ஜெனிவா ஐ.நா.மனித உரிமைச் சபையில் சிங்கள அரசுக்கும் தமிழின அழிப்புக்கும் அதன் போது அச்சபையில் சிங்களத்துக்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றக் காரணமாக அன்றைய இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலகாவின் மனைவி பின்வருமாறு தெரிவித்துள்ளார்

புதிய நாடுகள் உருவாகும் பொழுது அவற்றின் பழைய நாட்டின் புதிய எல்லைகள் வகுப்பது தொடர்பான சர்வதேச (சட்ட) நிபுணத்துவம் பெற்ற ஒருவர் முன்னாள் அமெரிக்க அரசாங்க திணைக்களத்தில் பணி புரிந்தவரான பேராசிரியர் ஸ்டீவன் ராட்னர் தருஸ்மன் விசாரணைக் குழுவில் ஒரு உறுப்பினர் ஆவார்.

## பேராசிரியர் ஸ்டீவன் ராட்னர்



ஒரு அரசு பெரும்பான்மை இன காரணிகளால் உந்தப் பட்டு ஏற்கனவே இருந்த சுயாட்சியின் எல்லைகளை ஆக்கிரமித்தால் அப்பொழுது அந்த மாகாணம் பிரிவினையை நாடலாம். அவ்வாறான நிலையில் அது தனது பழைய எல்லைகளைப் பெற தகு அடைகிறது என்பது ராட்னரின் வாதம்.

13வது திருத்தத்தை நீக்குவது சுயாட்சியின் எல்லைகளை சுருக்குவதாக கருதப்பட முடியம். அதற்கு மாற்று வழியாக மக்கள் வாக்கெடுப்பை நடத்தி அதன் முடிவுகளின் அடிப்படையில் மக்கள் ஆணையாக எடுத்து சமஸ்டி ஆட்சியா தனி ஆட்சியா எனப் பிரகடனப் படுத்த முடியும்.இவைகள் எல்லாம் சாத்தியமான வழிகள். இவற்றை திரு விக்கினேஸ்வரனோ அவரது சக அமைச்சர் அனந்தி சசிதரனோ சிந்தனையில் கொண்டிருக்க கூடும்.

இப்பொழுதான் ஜெனிவா அமர்வுக் கூட்டத்தில் தமது கருத்துகளை மிக உறுதியாகவும் பலமாகவும் பதிவு செய்து விட்டு தாயகம் திரும்பிய பாசத்துக்கு உரிய வை.கோ. அவர்கள் சென்னை விமான நிலையத்தில் ஊடகங்கள் மற்றும் தரவாளர்கள் மத்தியில் பேசும் பொழுது தான் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தியதாகவும் மக்கள் வாக்கெடுப் நிச்சயம் வரும் தமிழ் ஈழம் மலர்வது உறுதி எனக் கூறியுள்ளார்.

போர்க் குற்ற விசாரணையும் நீதியும் மக்களுக்கான இழப்பீடுகளும் நிலங்களும் வளங்களும் முழுமையாக மீள கொடுக்கப் பட்டால் மட்டுமே சமஷ்டி அதுவும் வெளியக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டிக்கு நாம் இணங்க முடியும். இல்லையேல் தனித் தமிழ் நாடு ஒன்றுதான் எமது தீர்வாக இருக்க வேண்டும். (தேடல் தொடரும்)


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!

www.nandys.de




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் விடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



Rufen Sie uns an:

Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955



# மட்டு நகர் பிரதிநிதி யோகேஸ்வரன் ஆன்மீக வாதியா அரசியல் வாதியா?

பரம்

அண்மையில் விநாயகர் சதுர்த்தி விழாவுக்குத் தமிழகம் சென்றிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சீனித்தம்பி யோகேஸ்வரன், தமிழக அரசியல்வாதிகள் தங்களது அரசியல் நலன்களுக்காக ஈழத் தமிழர் விவகாரத்தை அரசியல் துருப்புச் சீட்டாக பயன்படுத்தி வருகின்றனர் என்ற குற்றச் சாட்டை வைத்து உள்ளார்.

இதன் மூலம் அவர் தமது ஈழ அரசியல் தொடர்பான அறிதலையும் புரிதலையும் பத்திரிகையாளர் சந்திப்பில் வெளிப் படுத்தி உள்ளார். அதன் மூலம் அவரை அகரம் தனது பார்வைக்கு உட்படுத்தி சில உண்மைகளை வெளிப் படுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டார்.

முள்ளி வாய்க்கால் அழிவை 5 கோடி தமிழ் மக்களால் நிறுத்த முடிய வில்லையே என்ற கிலேசத்தில் சில அரசியல் கட்சித் தலைவர்களும் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகளும் கோடிக் கணக்கான மக்களும் மனம் வெந்து வெடித்து வேதனையில் தவிக்கின்றனர்.

இன்றும் மே 17 இயக்கத் தலைமை ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியும் அவரது தோழர்களும் சென்னை மரினா கடற்கரையில் முள்ளி வாய்க்கால் இன அழிப்பு நினைவாக மெழுகுவர்த்தி ஏற்றும் முயற்சியில் கைதாகி கால வரையறை அற்ற பிணையில் வெளவர முடியாக குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப் பட்டு நீண்ட சட்டப் போராட்டத்தின் பின்னர் விடுதலை ஆகி உள்ளர். திருமுருகன் காந்தியும் திரைப்ப வேறு பல ஆர்வலர்களும் ஐ.நா. சென்று ஈழத் தமிழ் மக்களுக்காகப் பல தடவைகள் சென்று போராடி வருகின்றனர். அவர்களைப் போன்றவர்கள் உங்கள் பார்வையில் குற்றவாளிகள் என்றால் கூட்டமைப்பும் அதன் தலைவர்களும் செய்வது நியாயமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

1983ல் சிங்கள அரசின் இனவெறித் தாக்குதலுக்கு ஈழத் தமிழினம் அல்லல் பட்ட பொழுது திருச்சியில் ஒரு இஸ்லாமியத் தமிழன்தான் முதன் முதலாக தன் பொன்னுடலைத் தீக்கிரையாக்கி தியாக வேள்வியை தொடங்கி வைத்தான் அன்று முதல் எத்தனை தமிழக உறவுகள் பெண் பிள்ளைகள் உட்பட இத்தகைய தியாக வேள்வியில் ஆகுதி ஆயினர் ? ஆனால் அவற்றுக்கு நாம் நன்றி சொல்லா விட்டாலும் பழியாவது சொல்லாமல் இருக்க வேண்டாமா?

அங்குள்ள அரசியல் வாதிகள் அப்படித்தான் நடந்ததாக வைத்துக் கொண்டாலும் அவர்கள் அயலவர்தானே த.தே.கூ. யோகேஸ்வரனும் அவரது கட்சிகளும் சொந்த மக்களை அரசியல் துருப்புச் சீட்டாகப் பயன் படுத்தாமல் வேறு எதற்குப் பயன்படுத்தி வருகிறீர்கள் ? வீடுகளை இழந்து வீதிகளில் வாழும் மக்களுக்கு சைக்கிள்களை கொடுத்தால் போதும் என வெளிநாட்டு பிரமுகரிடம் கேட்ட சம்பந்தர் சொகுசுக் கார்களைப் பெற்று அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களை பரம்பரை அடிமைகளாக்கும் கூட்டமைப்பின் செய்கை சரியா?

1983 முதல் எத்தனை இலட்சம் ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவில் அகதி முகாம்கள் என்று அழைக்கப்படும் சிறைக் கொட்டில்களில் அடைத்து வைக்கப் பட்டு அடிப்படை வசதிகளோ உரிமைகளோ ஐ.நா.சபை அங்கீகாரமோ இல்லாமல் அவதிப் படுகிறார்கள் என்பது கூட்டமைப்புக்குத்; தெரியாதா?

அங்கே ராஜபோக வாழ்க்கை நடத்தும் சம்பந்தன் ஒரு நாளாவது இவர்களைப் பற்றித் தமிழக அரசுடன் பேசியோ அவர்களை நேரில் சென்று பார்த்துப் பேசியோ இருப்பாரா? அந்த அகதிகளை வைத்துத்தானே அவர் உலகெங்கும் அரசியல் நடத்துகிறார்?

திரு யோகேஸ்வரனின் வெளித் தோற்றமும் அவர் பயன்படுத்தும் சொற்களும் ஆன்மீக போதனை போன்று இருக்குமே அல்லாது அவற்றில் அரசியல் தன்மை வெளிப் படையாகத் தெரியாது. இப்படியான மயக்கப் பேச்சுகள் த.தே. கூட்டமைப்பின் செயற்பாடுகளை நியாயப் படுத்தாதது போல வெளியில் தெரியும். ஆனால் அவை நியாயப் படுத்தும் பணியை மிகச் சிறப்பாகச் செய்து விடும்.

பச்சையாகச் சொல்வதானால் அவரது மனதை நோகடிக்கும் என்பதால் அதைச் சொல்லாமல் விட்டு விடுகிறோம். உதாரணமாக த.தே.கூ. அதிகார பூர்வமாக போர்க் குற்ற விசாரணை வேண்டும் என்கிற கோரிக்கையை வைக்காமல் வெளிப் படையாக நொண்டிக் காரணங்களைச் சொல்லி தாங்கள் செய்வது சரியே எனப் பேசி வருகின்றனர்

ஆனால் மக்களோ தமது நலன்கள் கோரிக்கைகள் பற்றி கூட்டமைப்பு எதுவும் செய்வதில்லை என்ற கோபத்தில் உள்ளனர் என்பது தலைமைக்கு நன்றாகத் தெரியாது எனச் சொல்ல முடியுமா?

நிலைமை அப்படி இருக்கையில் திரு.யோகேஸ்வரனும் வேறு 10 கூட்டமைப்பு உறுப்பினர்களும் ஐ.நா.வுக்கு போர்க் குற்ற விசாரணை வேண்டும் என எப்படி கோரிக்கை மனுவை அனுப்ப முடிந்தது. அதனைக் கூட்டமைப்பு தலைமை கட்சி கூட்டமைப்பு விதிகளை மீறியதாக எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லையே ஏன்? இந்த இரட்டைநிலை அரசியல் வாக்களித்த மக்களையே துருப்புச் சீட்டாக பயன் படுத்துவதாக உள்ளது என்ற உண்மை தெரியாதவர் அரசியல்வாதியா ஆன்மீக வாதியா?



# உளம் திறக்கும் உண்மைகள்.

"உளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.

AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu



## அம்மா

அன்னமிட்டு
அரவணைத்தாள் பலரை
இன்று அவளை
அரவணைக்குது முதியோர்
இல்லம்

## மாற்றம்

தோற்றம் மாறினும் வேசம்
போடினும்
ஏற்றம் தருவது உண்மையின்
உழைப்பு



## கல்வி

கனவுகளைத் தொலைத்துவிட்டு
கண்ணீரை வாங்குவதே
கலிகாலக் கல்வி



## இயற்கை

இயற்கையை உணர்ந்தபின்
இல்லாமை என்பது
இல்லவே இல்லை.



## எதிர்பார்ப்பு

எதுவும்
என்றும் பாதிப்பதில்லை
எதிர்பார்ப்பு இல்லாவிடில்


# அகரக் கவிக்களம்...

தொகுப்பு: தமிழ்விழி



## வாய்மொழி

யார் சொல்கிறார்கள் என்பதல்ல,
எதைச் சொல்கிறார்கள் என்பதுவே
சிறப்பு



## வெறுவானம்

விண்மீன்கள் இல்லாத
வெறுவானம் போலவே
உறவுகள் இல்லாத வாழ்வு



## பணம்

பணம் இறந்த உடலில்
உண்ணி களறுவது போல கழண்டது
உறவுகள்
அவனிடம் பணம் இல்லை
என்று தெரிந்த போது...

## அன்பின் சக்தி

நெருங்கியவர்களை ருநெருங்கியே
செல்வீர்களே தவிர -
மறந்துவிட முடியாது!!
அதுதான் அன்பின் சக்தி!!!!

ஆக்கம்: தமிழ்
தமிழ்விழி
கனிமொழி

விளம்பரத்
தொடர்புகளுக்கு:
0049 17647118711

www.akaram.eu

பாகம் 4



# அவனா? இவன்!

## மத மாற்றமும் தமிழின அழிப்பும்?

போத்துக்கீசர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதோடு வட பகுதித் தமிழ் மக்கள் மிகப் பெரும் நெருக்கடிகளுக்குள் தள்ளப் பட்டனர். நந்திக் கொடியும் சைவ கோயில்களும் தமிழ் மக்களின் வாழ்வியலாக இருந்து சங்கிலி அரசனின் ஆட்சியில் பெருமைபட வாழ்ந்த தமிழன் ஆட்சியை வஞ்சகம் சூது காட்டிக் கொடுப்புகளால் இன்று போல் அன்றும் தமிழ் இனம் எல்லாம் இழந்து தவித்தது. புரட்டஸ்தாந்து மத போதகர்கள் ஆட்சியாளரின் ஆசியோடு தேவாலயங்களையும் கல்விக் கூடங்களையும் அமைத்து மதமாற்றத்தை தீவிரப் படுத்தி வந்தனர். பணத்துக்காகவும் டொன் என்ற ஒல்லாந்த அரசின் பட்டத்துக்காகவும் அன்றும் இன்று போல் விலை போனது ஒரு கூட்டம்.



திருக் கோணேஸ்வர ஆலயம்

ஆட்சியை அமைத்த ஒல்லாந்தர் சைவக் கோயில்களை இடித்து அவற்றின் கற்களை பயன் படுத்தி தமது தேவாலயங்களையும் ஆக்கிரமிப்புக் கோட்டைகளையும் கட்டிக் கொண்டனர். போர்த்துக் கீசர் அவர்களின் அட்ட காசத்தால் சைவக் கோயில்கள் இடிக்கப்பட்டன. அவற்றை அலங்கரித்த பொன் வேய்ந்த கூரைகளும் ஐம் பொன் சிலைகளும் பெறுமதி மிக்க வைர வைடூரிய தங்க நகைகளும் சிலைகளும் அந்நியரின் பெறுமதி மிக்க கொள்ளைப் பண்டங்களாக மாறின.

மக்கள் பலவந்தமாக மதம் மாற்றப் பட்டனர். அவர்கள் தமிழரது அடையாளங்களை பெயரை மாற்றிக் கொண்டதோடு மதம் மாறிய தமிழர் அல்லாத வேற்று இனத்தவராக மாற்றப் பட்டனர் அல்லது பலர் தாமாகவே மாறிக் கொண்டனர். அந்நியர் வரும் வரை அண்ணன் தம்பி அக்காள் தங்கை அப்பன் சித்தப்பன் அம்மான் மாமி எனப் பிணைந்திருந்த சமுதாயம் திருமணம் சாவீடு எதிலும் பங்கு பற்றாத வேற்று மக்களாக அந்நியப் படுத்தப் பட்டனர். ஏற்கனவே ஆரியம் புகுத்திய வர்ணாசிரம் சாதி தீட்டுகளால் பிரிந்து கிடந்த தமிழினம் மேலும் உடைந்து சிதறியது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு எனப் பாடம் படித்த இனம் தன் அறிவை மொழியை இனத்தை மறந்தது.

அவன் அன்று பிறந்த காலத்தில் அங்கே கத்தோலிக்கமும் அங்கிலிக்கன் வெஸ்லி அமெரிக்கன் மிசனரிகளின் வரவால் மேலும் தாக்குதலுக்கு உள்ளானது. அவன் பிறந்த வீடு இன்று மிகப் பிரபலம் பெற்று விளங்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலின் தெற்கிலும் வடக்கே அம்பனை வயலில் உள்ள திரௌபதை அம்மன் கோயிலும் செல்வாக்கும் செலுத்தும் பகுதியில் இருந்தது. மேலும் சைவ

பரிபாலன சபை நடத்தும் சைவப் பள்ளிக் கூடமும் மிக அருகில் இருந்தது.

இவற்றுக்கு மத்தியில் கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரின் இல்லமும் அதில் மத சேவை செய்யும் பெண்களும் இருந்து தமது பிரச்சாரங்களை நடத்தினர். அவர்கள் அயலில் உள்ள வீட்டுப் பெண்களுடன் மிக நெருக்கமான நட்பை வளர்த்து தமது மதப் பிரச்சாரத்தை பூடகமாக செய்து வந்தனர். இந்த நட்பின் வளையத்தில் அவனது தாயாரும் சிக்கியது மிகப் பெரும் அதிசயம்தான். இத்தனைக்கும் அவனது தாயார் அருகில் இருந்த சைவ பள்ளிக் கூடத்தில்தான் தொடக்கக் கல்வியைப் பெற்றார். இருப்பினும் அவருக்கு கத்தோலிக்க துதிப் பாடலான பர லோகத்தில் இருக்கும் பரமபிதாவே எனத் தொடங்கும் தோத்திரப் பாடல் மனப் பாடமாக தமது 50வது வயதில் கூட முழுமையாக ஒப்புவிக்கும் அளவுக்கு கத்தோலிக்க மதத்தின் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

அவன் பிறந்த பொழுது அது வரை அவனோடு உடன் பிறந்த அண்ணன்மார் இருவருக்கும் சைவக் கடவுளரின் பெயர்களே வைக்கப் பட்டிருந்தன. ஆனால் அவனுக்கோ கடவுள் பெயரும் இல்லை ஆணின் பெயரும் இல்லை பெண்ணின் பெயர் ஒத்த கிருத்தவர்களிடம் காணப் படக் கூடிய பெயர் வைக்கப் பட்டது. இதனால் அவன் பலரது கேலிக்கு உள்ளாகி பெரும் மன உளைச்சலுக்கு ஆளானான். மனம் தாங்காமல் ஒரு நாள் தன் தாயிடமே தனது சகோதரர்களுக்கு வைக்கப் பட்ட பெயர் போல இந்துக் கடவுளர்களின் பெயரோ அல்லது அவனது முன்னோரது பெயரோ வைக்காமல் இப்படி ஒரு இரண்டும் கெட்டான் பெயர் எப்படி வைக்கப் பட்டது எனக் கேட்டான்.

அந்தக் கேள்வியை எழுப்பிய பொழுது அவனுக்கு வயது 30 க்கு மேலாகி விட்டது. அன்றுதான் அவன் தாய் அவனிடம் கத்தோலிக்க மாதாக்கள் எனப்பட்ட அந்த பாதிரியார் இல்லத்தில் மதப் பணி செய்தவர்களால் அவனுக்குப் பெயர் வைக்கப் பட்டது என்ற தகவலைச் சொன்னார். இது நடந்து சுமார் இருபது வருடங்கள் கழித்து இந்தியாவிலும் பின்னர் யேர்மனியிலும் கத்தோலிக்க பிரச்சாரப் படை இவனை வலை போட்டுப் பிடித்து விட முயன்றது. கத்தோலிக்க மதப் பிரச்சாரம் அந்த அளவுக்கு வலிமையும் வன்மையும் கொண்டு திகழுகிறது.


இன்னமும் இந்தப் படையெடுப்பு இவனை ஒத்த தமிழரிடம் தொடர்ந்த படியே உள்ளது. அகதித் தஞ்சம் பெறலாம் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுப் பெறலாம் என்பன போன்ற ஆசை வார்த்தைகளால் பிள்ளையார் வைரவர் முருகன் பின்னால் அலைந்த சைவப் பரம்பரைகள் இன்று அல்லலோயா பாடி தமிழின விடுதலைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் தமிழ் இனத் துரோகிகளாக தமிழர்கள் எனச் சொல்லி வாழ்வதும் அல்லாமல் புகலிட தேசங்களில் மதத் தொண்டாற்று வதாக மார்பு தட்டிக் கொள்கின்றது.

சொந்தப் பெயரால் அவன் பட்ட துன்ப துயரங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அப்பொழுது அவன் நாலாம் வகுப்பு மாணவன். அவன் படித்த பாடசாலை தனியார் சைவப் பாட சாலை. அதனை தெல்லிப்பழை பாவலர் தெயிலர் துரையப்பாபிள்ளை திண்ணைப் பள்ளிக் கூடமாக தமது வீட்டில் 1910ல் தொடங்கி நடத்தி வந்தார். பின்னர் அது தற்போது உள்ள இடத்தில் ஊர் மக்களின் நல் ஆதரவை மட்டுமே நம்பி நடத்தப் பட்டு வந்த பள்ளிக் கூடம் அது. அக்காலத்தில் ஆசிரியர்களுக்கு மாதம் 30 ரூபாய் கூட கிடைத்திருக்குமோ தெரியாது.


இன்றைய மகாஜனா

1946ல் அவன்சேர்ந்த பொழுது ஜூனியர் மெட்டிறிக்குலேசன் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்த பாடசாலை 1956ல் அவன் வெளியேறிய பொழுது இலங்கை அளவில் பெயர் பெற்ற மகாஜனாக் கல்லூரியாக விளங்கியது. அந்தப் 10 வருடத்தில் மாணவர் தொகை 400ல் இருந்து 1400 க் கடந்து விளங்கியது. தென்னங் கீற்றுக் கூரைகள் மாடிகளாகவும் ஓடுகளாகவும் ஒளிபெற்று கம்பீரமாக காட்சி அளித்தது. அதன் வளர்ச்சியில் பாவலர் துரையப்பாவின் மகன் ஜெயரட்ணம் பன்னாலை தம்புவாத்தியார் எனப் பெரிதும் பாராட்டப்பட்ட சின்னத்தம்பு ஆசிரியர் போன்றவர்களின் தியாகம் மிக்க உழைப்பும் அர்ப்பணிப்பும் அளவற்று இருந்த காரணத்தால் இப்பெரும் வளர்ச்சியை அடைய முடிந்தது.

ஆக்கிரமிப்பில் இன்று



ஆறுமுகநாவலர் தொடக்கிய சைவபரிபாலன சபை ஓரளவு நிதி வழங்கினால் அல்லது முழுக்க முழுக்க

ஊர்மக்கள் தயவில் தங்கியிருந்த காலம். கூரை வழியாக வானத்தைப் பார்க்கலாம் அந்த வழியால் வான் மழை வருவதையும் காணலாம். அதனை வேய்வதற்கு ஒவ்வொரு வருடமும் அதிஷ்ட லாபச் சீட்டுகள் மூலம் பணம் திரட்டுவது வழக்கம் அந்த வருடம் தீபாவளியை முன்னிட்டு நடத்திய அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பின் பொழுது அவனும் அங்கு இருந்தான்.

அவனது போதாத காலம் அவன் பெயர் கொண்ட சீட்டுக்கு 2வது பரிசான ஆண்களுக்கான வேட்டி கிடைத்திருந்தது. சீட்டிழுப்பை நடத்திய ஆசிரியர்கள் பரிசுக்கு உரியவர் யாரென்பதை அறிய சுற்று முற்றும் பார்த்தனர். அவனுக்கோ பரிசு தனக்கே என நம்ப அவனது மனம் இடம் தரவில்லை. அதனால் அமைதியாக இருந்து கொண்டான். இதற்கிடையே ஆண்களுக்கான வேட்டி பரிசாக விழுந்துள்ளது. பரிசுக்கு உரியவரின் பெயரோ பெண்ணின் பெயராகத் தெரிகிறது எனவே என்ன செய்யலாம் என்ற விவாதத்தில் ஆசிரியர் கூட்டம் இறங்கி விட்டது.

அவன் பெயருக்கும் தன்மானத்துக்கும் விழுந்த முதல் அடி அது. இவற்றைப் பார்த்த பின்னர் அவனாகவே தயங்கித் தயங்கி எழுந்து அந்தப் பெயருக்கு உரிய நபர் தானே எனத் தெரிவித்தான். அந்த வருடத் தொடக்கத்தில்தான் அவன் அந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்திருந்தான் பணமோ புகழோ கொண்டிருக்காத குடும்பத்தில் பிறந்த அவனை எவரும் முன்னரே தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் இருக்க வில்லை. அவனது பயத்தையும் தயக்கத்தையும் அறியாத ஒரு ஆசிரியர் மட்டும் அது அவனது தன்னடக்கம் என நினைத்து அனைவருக்கும் சொல்லிப் பாராட்டினார்.

சுமார் 10 வருடங் கழித்து அவர் துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது அவன் பொதுத் தராதரப் பரீட்சையில் எவரும் எதிர்பார்த்திராத சித்தியை பெற்ற நேரத்திலும் அவனை வாயாரப் பாராட்டி கைலாகு கொடுத்து வீட்டுக்கு வழியனுப்பிய ஒரே ஒரு ஆசியராகவும் அவர் தம்மை அடையாளப் படுத்தி அவனது உள்ளத்தில் அழியாத இடத்தையும் பெற்றுக் கொண்டார். அவர்தான் நெடிய ஆஜானுபாவ தோற்றம் படைத்த திரு.கிருஷ்ண பிள்ளை. அவரது உள்ளத்தைப் போன்றே எப்போதும் வெள்ளை வேட்டியும் நாஷனல் எனப்படும் தேசிய மேல் சட்டையம் அணிந்திருப்பார். முகத்தில் மிகப் பெரிய அழகான வெண்பற்கள் நிறைந்த சிரிப்பு 1000 வாட் மின்குமிழ் போன்ற பிரகாசத்தை சிந்தி நிற்கும்.

(அவனா ? இவன்! வருவான்)






www.kerven-gmbh.com

**KERVEN GMBH**
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com

**KERVEN GMBH**
191 Rue du Faubourg 75010 Pari
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 2
+33 754 11 20 2
E-Mail:info@kerven-gmbh.com



33

# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

**தேவன்**

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாமே மனிதனுக்கு நன்மை தருவன அல்ல, ஆனாலும் அவையின்றி மனிதனால் இந்நாட்களால் இயங்க முடிவதில்லை. சில அடிப்படைத் தேவைகளுக்குக் கூட விஞ்ஞானமே தேவைப்படுகிறது. ஆனால் அதே விஞ்ஞானமே மனிதனுக்குப் புரியாத புதிராகவும் அமைந்துவிடுகிறது. ஆட்டிப்படைப்பவன் கையில் விஞ்ஞானம் இருந்தால், நாமெல்லாம் ஆட்டுவிப்பவனுக்கேற்ப ஆடத்தான் முடியுமே தவிர வேறெதுவும் செய்யமுடியாது.

வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய கதைகளும், பறக்கும்தட்டுத் தொடர்பான விளக்கங்களும் இன்னமும் மனிதர்களைக் குழப்பத்திற்கு ஆளாக்குவதாகவே உள்ளன. இவை எல்லோர் கண்களுக்கும் தெரிந்தனவா என்றால் அதுவும் இல்லை. எங்கேயாவது விஞ் ஞானிகளுக்கும், விமானமோட்டிகளுக்கும் மட்டுமே இவை தென்படுகின்றன. அதுவும் அமெரிக்க படைத்துறை ஆய்வு மையங்கள் அல்லது அது தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே பறக்கும் தட்டுக்கள் தொடர்பான விடயங்களை வெளியிடுகிறார்கள். ஆனால் அமெரிக்க விண்வெளி ஆய்வுக்கூடமான நாசா பறக்கும் தட்டுக்கள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. இது ஒரு முரண்பாடான ஆனால் நகைப்புக்குரிய விசித்திரமான உண்மை. அது ஏன் என்பது பற்றி இக்கட்டுரையின் இறுதியில் தெரியப்படுத்துகிறேன்.

முதன் முதலில் பறக்கும் தட்டுக்களைக் கண்டது பற்றிய விடயத்தை வெளியிட்டவர் ஒரு அமெரிக்கத் தொழிலதிபர் ஆவார். கென்னத் ஆர்னோல்ட் என்ற அந்தத் தொழிலதிபர் 1947 ஆம் ஆண்டு, தனது சிறிய விமானத்தில் வாசிங்டன் நகருக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தபோது, தேநீர் கோப்பைத் தட்டுக்கள் போன்ற வடிவமுடைய சில தட்டுகள் கூட்டமாக மிதப்பதைக் கண்டார். அவை நீரில் மிதப்பன போல சுழன்று சென்று கொண்டிருந்தாகவும், மணிக்கு 1700 கி.மீ வேகத்தில் பறந்துசெல்வதாகவும் தெரிவித்தார். அதன்பின்பு அவை மறைந்துவிட்டன. அன்றிலிருந்து இன்றுவரை அமெரிக்காவின் பல பகுதிகளில் அவை தென்பட்டதாகவும், உடனே மறைந்துவிடுவதாகவும் கூறப்படுகிறது. பறக்கும் தட்டு சம்பந்தமான ஒளிப்படங்கள் பலவும் இணையத்தில் கிடைக்கின்றன. ஆனால், இது எவ்வளவு தூரம் உண்மை அல்லது நடக்க வாய்ப்புள்ளது என்ற ஆராய்ச்சியில் யாருமே இறங்கியதில்லை.

இது இவ்வாறிருக்க, அமெரிக்காவின் நெவேடா என்ற இடத்திற்கு அருகாமையில் "51 வது வலயம்" (Area 51) என்றொரு தளம் அமெரிக்க இராணுவக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அந்த இடத்திற்கு அங்கே பணிபுரிபவர்களைத் தவிர வேறுயாரும் அனுமதிக்கப்படுவதில்லை. அமெரிக்காவின் உளவுப் பிரி வினரால் இயக்கப்படும் அந்த முகாம் பற்றிப் பலர் கேள்வி எழுப்பியபோதும் இதுவரைக்கும் அமெரிக்க அரசாங்கம் நிறைவான பதிலை யாருக்கும் தந்ததில்லை. அது ஒரு இராணுவப் பயிற்சி முகாம் என்ற வரையறையிலேயே அதற்கான விளக்கம் தரப்படுகிறது. ஆனால், பறக்கும் தட்டுத் தொடர்பான ஆராய்ச்சிகள் அங்கே நிகழ்ந்து வருவதாக பலர் ஏற்கனவே ஊகித்து எழுதிவந்தனர்.

ஏனெனில் இதுவரையில் தென்பட்ட பறக்கும் தட்டுக்கள் பல அந்த இராணுவத் தளம் இருக்கும் திசையிலேயே சென்று மறைந்திருக்கின்றன என்பது தான் மிகுந்த சந்தேகத்தைப் பலருக்கு வரவழைத்தது.

இரண்டாம் உலகப்போர் காலத்திலும் பறக்கும் தட்டுக்கள் பற்றிய சந்தேகம் இருந்திருக்கிறது. அமெரிக்க விமானங்களைப் பின் தொடர்ந்து வந்த சில ஒளிவட்டங்கள் போன்ற உருவங்களை யேர்மனியரின் உளவு விமானங்கள் என அமெரிக்கர்கள் சந்தேகித்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இவை எல்லாமும் தொடர்ந்த கதைகளாகச் சொல்லப்பட்டனவே தவிர தீர்க்கமான ஆராய்ச்சிகள் எதுவும் நிகழ்த்தப்படவில்லை. Blue project (நீல வேலைத்திட்டம்) என்ற பெயரில் பறக்கும் தட்டுக்களை ஆராய்வதற்கான செயற்பாடுகள் நடைபெற்றபோதும் அவை பின்னாளில் முற்றுப்பெறவில்லை.

பறக்கும் தட்டு என்று எதுவும் இல்லை, அவை உருவாக்கப்பட்ட மாயை என்று கருத்துக்கூறும் விஞ் ஞானிகளும் உண்டு. அது என்ன உருவாக்கப்பட்ட மாயை என்று நீங்கள் சிந்திக்கக்கூடும். சாதாரணமாகச் சொன்னால், நம் ஊரில் கலை வந்து சாமி ஆடுதலைப் பார்த்திருப்பீர்கள். பத்திரகாளி வந்து இறங்கி ஆடுவதாகச் சொல்லி, ஆடுபவர் கேட்கும் பொருட்களை எல்லாம் சாமி வாக்கு என்றபெயரில் வாங்கி வந்து படைப்பது நம்மவர்கள் வழக்கம். இதுதான் பறக்கும் தட்டு விவகாரம். ஆனால் இதை வைத்து சாமி ஆடுபவர்கள் யார் என்பதும், அவர்களுக்கு இதனால் என்ன இலாபம் என்பதுவுமே இன்றைய கேள்வி.

உன்னிப்பாகக் கவனித்தீர்களேயானால் சில விடயங்களில் நீங்கள் தெளிவு பெறமுடியும் . அதாவது, அமெரிக்காவைத் தவிர வேறு எங்கும் இது வரையில் பறக்கும் தட்டுக்கள் அதிகமாகத் தென்பட்டது கிடையாது. அவ்வாறே அவற்றைக் கண்ட விமானமோட்டிகளும் அமெரிக்கர்களே. இதை விடவும், கடந்த அமெரிக்கத் தேர்தலில் கிலாரி கிளிண்டன் அவர்கள் போட்டியிட்ட போது, வெளியிடப்பட்ட அவரது வாக்குறுதிகளில் "பறக்கும் தட்டுத் தொடர்பான இரகசியங்களை வெளியிடுவேன்" என்பதுவும் முக்கியமாக அமைந்தது. கிலாரி கிளிண்டன் தோற்கடிக்கப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணம் என மக்கள் அங்கே பரவலாகப் பேசிக்கொண்டமை பற்றியும் Times இதழ் குறிப்பிட்டிருந்தது. அதாவது, பறக்கும் தட்டுக்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் அமெரிக்க உளவுத்துறை பற்றி வெளியே தெரியப்படுத்தினால் அது அமெரிக்க இறையாண்மையைப் பாதிக்கும் என்பதே அவர்களது அடிப்படை வாதம். அவ்வாறு நிகழ அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை.


அப்படியானால் அங்கே ஏதோ மர்மம் இருக்கிறது. அதில் அமெரிக்காவிற்குப் பயன் தரக்கூடிய ஏதோ ஒரு விடயம் இருக்கிறது. அது என்னவாக இருக்கும் என்பது பற்றி பலவிதமான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. பறக்கும் தட்டுகள் பற்றிய புகைப்படங்களை ஆராய்ந்துவரும் Scott Brando என்ற ஆராய்ச்சியாளரது கூற்றுப்படி, பறக்கும் தட்டுக்கள் பற்றிய ஒன்றுக்கு மேற்பட்ட ஆயிரம் நிழற்படங்களிலும் உறுதி செய்யமுடியாத பல சந்தேகங்கள் நிலவுவதாகவும், அவற்றில் இயற்கையான நிழற்படமாக இருக்க வாய்ப்பில்லை எனத் தான் நம்புவதாகவும் தெரிவிக்கிறார். அதற்கு அவர் சில காரணங்களையும் தெரிவிக்கிறார். பறக்கும் தட்டுத் தொடர்பான அனைத்து நிழற்படங்களும் தெளிவற்ற நிலையிலேயே படம் பிடிக்கப்படுகின்றன. இதுவரை வந்த அநேகமான பறக்கும் தட்டுகள் மாலை நேரம் அல்லது இரவு நேரங்களிலேயே தென்படுகின்றன. இதுவரை எவையும் தரை இறங்கியதாகக் காண்பிக்கப் பட்டதில்லை, அவற்றைத் துரத்திச் செல்லும் எல்லாப் போர் விமானங்களும் அவற்றைத் தவற விட்டு



விட்டதாகவே இறுதியில் தெரிவிக்கின்றன. இவ்வாறான பல ஒற்றுமையான காரணங்களை அவர் சீர்தூக்கி வெளியிடும் முறையில் பறக்கும்தட்டு என்பது இயக்கப்படும் ஒரு பொருள் என்ற தெளிவுக்கு வரக்கூடியதாயுள்ளது.

ஏன் அவற்றை இயக்க வேண்டும்..? எல்லா இடங்களிலும் மூக்கை நுழைத்துப் பிரச்சனை உண்டுபண்ணுவதாக அமெரிக்கா மீது இருக்கும் கண்டனங்களுக்குப் பதில் சொல்வதில் அவர்களுக்கு உடன்பாடில்லை. அதைவிடவும் தமது இராணுவத்தைக் கொண்டு தமக்கு எதிரான நிலைகள் மீதோ, அன்றி தமக்கு நன்மை பயக்கக்கூடியதான தாக்குதல்களையோ நிகழ்த்துவதும் எப்பொழுதும் இலகுவானதுமல்ல. அதற்கான தீர்வே இந்தப் பறக்கும் தட்டுகள் என்ற நம்பக்கூடிய ஒரு கருத்து தற்போது பரவலாகிறது. தமக்கு நன்மை பயக்கக்கூடிய தாக்குதல்கள் என்றால் என்ன..? நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதலைச் சாட்டாக வைத்து, பல அரேபியத் தேசங்களில் தாக்குதலை நடாத்தியது அமெரிக்கா. அதன்மூலம் இன்று பல நாடுகளை வளைத்து கொண்டாயிற்று. இடிந்து விழுந்த இரட்டைக் கோபுரத்தை மீண்டும் கட்டியாயிற்று. இதுதான் அவர்களுக்கு நன்மை பயக்கும் தாக்குதல்கள். இந்தத் தாக்குதலை யோர்ச் புஷ் அரசே திட்டமிட்டுச் செய்வித்ததாக ஒரு காணொளி வெளிவந்து உலகையே உலுக்கியதை அறிவீர்கள். அதேபோல உலகின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஒரு நாட்டில் தாக்குதல் தொடுத்து அவர்களது முக்கியமான நிலைகளை அழிக்கவே இந்தப் பறக்கும்தட்டுக்களை உருவாக்கி உலாவவிட்டு ஒத்திகை பார்க்கிறார்கள் அமெரிக்க உளவுப் பிரிவினர் என்பது இன்று பலரது ஊகமாக ஆகிவிட்டது.

நான் மேலே குறிப்பிட்ட 51 வது வலயம் இருக்கும் பகுதியிலிருந்துதான் பறக்கும் தட்டுகள் இயக்கப்படுகின்றன என்பதும் உண்மையாக இருக்கக்கூடும். அதனாலேயே எவரையும் அங்கு அனுமதிப்பது கிடையாது. தமது தேவைக்கு அவசியமான ஒரு நாட்டில் பறக்கும் தட்டு மூலமாகத் தாக்குதல் தொடுத்து, பின்னர் அதைச் சாட்டாக வைத்து அங்கே கால் பதிப்பதே உளவுத்துறையின் திட்டமாகக் கூட இருக்கலாம். ஆனால் அது எங்கே எப்போது என்பதுதான் புரியாத இரகசியமாக இருக்கிறது. அமெரிக்காவின் விண்வெளி ஆய்வுமையமான நாசா நிறுவனம், ஏன் பறக்கும் தட்டுக்கள் பற்றி அலட்டிக்கொள்வதில்லை என்பது பற்றி இந்தக் கட்டுரையில் இறுதியில் சொல்கிறேன் என்றேனல்லவா..? பெரிதாக ஒன்றுமில்லை, அவர்களே உருவாக்கி அலையவிடும் பறக்கும் தட்டுகள் பற்றி, அவர்களே ஏன் அலட்டிக்கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் அது.

உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்

Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice

MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02






சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்!
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com
info@nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52




GUARANTEE
BEST PRICE
GUARANTEE
உயர்தர புடவைகள் மற்றும் அணி வகைகள் வாங்க சிறந்த இடம்
Rani palace
Tel: 044 440 60 52
044 440 60 52
ranipalace60@gmail.com
Neugasse 60, 8005 Zürich - Switzerland



5

# கிராமங்களில் இருந்து ஐரோப்பாவரை
# இசை – நாடக – கூத்துக் கலை

வண்ணை தெய்வம்

வாசகர்களுடன் கூத்துக் கலைஞர்களைப் பற்றி எழுத ஆரம்பித்தபோது வரவேற்பும், பாராட்டுக்களும் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்திருந்தோம். இப்படி பாராட்டியவர்களெல்லாம் அந்த கலைத்துறை சார்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்களைத் தவிர்த்து ஏனைய வாசகர்கள் மத்தியிலான கருத்துக்கள் இந்தத் தொடர் படிப்பதற்கு சுவார்சியமாக இல்லையென்ற கருத்தே பலரிடமும் இருந்து வந்திருக்கின்றன. அதற்காக இந்த கட்டுரைத் தொடரை நிறுத்திவிடப்போவதில்லை. மாறாக ஒவ்வொரு கலைஞர்களைப் பற்றியும் சுருக்கமாக, சுவார்சியமாக கூறிவிடலாம் என நினைக்கின்றோம். அதுமாத்திரமல்ல 'பசுமை நிறைந்த நினைவுகள்" என்னும் புதிய பகுதியையும் இதனுடன் இணைத்தே தருகின்றோம்...



"கலாவினோதன்" சின்னமணி என்று அழைக்கப்பட்ட நா.கணபதிப்பிள்ளை என்ற பெரும்கலைஞன்.

பருத்தித்துறையில் உள்ள மாதனை என்னும் கிராமம்தான் கலைஞர் சின்னமணி அவர்களின் பிறப்பிடம். பின்னர் இவர் திருமணம்; செய்து கொண்ட வகையில் அச்சுவேலியே இவரது வாழ்விடமாகிவிட்டது.

கலைமணம் கமழும் மாதனை கிராமத்தில் கலையிற் சிறந்த குடும்பமான நாகலிங்கம் ராசம்மா தம்பதிகளுக்கு 1936ம் ஆண்டு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் இந்த சின்னமணி என்ற கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவிலடியில் 'யாழ் கலேசேத்திரா" என்னும் நாட்டியப் பாடசாலையை நடாத்திவந்த 'கீதாஞ்சலி" நல்லையா அவர்களிடம் இயலிசை நாடகம் பற்றிய அடிப்படை அறிவனை கற்றுக்கொண்டவர்.

1949ம் ஆண்டில் இவர் ஏழாலையில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில் 'கீதாஞ்சலி" நல்லையா அவர்களால் பழக்கப்பட்டு பாடசாலை மாணவ, மாணவிகளுடன் இவர் பங்குபற்றிய காவடி நடனம் கொழும்பு விக்ரோறியாப் பூங்காவில் அப்பொழுது இலங்கை வந்திருந்த எலிசபெத் மகாராணியார் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டு அவரது கையால் பரிசும் பெற்றிருக்கின்றார்.


கரகாட்டம், காவடியாட்டம், நடனம் ஆகியவற்றில் வல்லவராக விளங்கிய திரு சின்னமணி அவர்கள் வில்லிசை நடாத்தும் வித்தையை தமிழ்நாடு சென்று கற்று வந்தவர். கூத்துக் கலைக்கு இவருக்கு குரு என்று யாரையும் குறிப்பிடமுடியாது. நாட்டியத்திறன் இவரிடம் இருந்ததனால் நேரடியாகவே கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து நடிக்க அரம்பித்தவர் 1962ம் ஆண்டளவில் அப்பொழுது மாதனையில்

சிறந்த கூத்துக் கலைஞர்களாக விளங்கிய திரு.க.பசுபதி, திரு.ச. செல்லத்துரை, திரு.எஸ். ராசதுரை, திரு.த. சோதிலிங்கம் ஆகியவர்களுடன் இணைந்து 'மாதனா கலாமன்றம்" என்னும் அமைப்பை ஆரம்பித்து முதன் முதலில் அரிச்சந்திரா என்னும் இசை நாடகத்தை பழகி அரங்கேற்றினார்கள். இந் நாடகத்தில் சின்னமணி அவர்கள் நாரதர், அயலாத்துப்பிள்ளை, சுடலையில் மேளம் அடிப்பவர், மற்றும்நகைச்சுவை நடிகரென நான்கு பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தார்.

இவருக்கு பெரும் புகழையும் வரவேற்பையும் கொடுத்தது தீர்க்கசுமங்கலி நாடகத்தில் நடித்த ஜமன் பாத்திரம்தான். இந்த நாடகத்தின் மூலம் கிடைத்த 'ஜமன் சின்னமணி" என்ற பட்டம்தான் பின்னாளில் சின்னமணி என்ற பெயராக நிலைத்துவிட்டது. தொடர்ந்து பவளக்கொடி, ஶ்ரீவள்ளி, இராமாயணம், காத்தவராயன் என இசை நாடகங்களில் புகழ்பெற்று பிற்காலத்தில் வில்லிசையிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியதால் கூத்துக்கள் நடிப்பதில் இருந்து ஒதுங்கிவிட்டார்.

வில்லிசை நிகழ்ச்சிகளுக்காக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்றுள்ள இவருக்கு 'கலாவினோதன்" 'முத்தமிழ் மாமன்" 'பல்கலை வேந்தன்" 'வில்லிசைப்புலவர்" ஆகிய பட்டங்கள் கிடைத்து இவரைக் கௌரவித்திருக்கின்றது

பன்முகத் திறன் கொண்ட இப் பெரும் கலைஞர் 04.02.2015 அமரராகிவிட்டார்.



கூத்துக் கலைஞர் வேக்மன் ஸீஜயராசா



யாழ்ப்பாணம் பறங்கித்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்1945ம் ஆண்டில் பிறந்தவர். அண்ணாவியார் பரம்பரையைச் சேர்ந்தவரான இவரின் பெரிய தகப்பனார் நாவாந்துறை மரிசலீனும், சிறிய தகப்பனாரான சூசை மரியானும் சிறந்த அண்ணாவிமார்களாவர்கள். இவர்களுடன் சேர்ந்து இளம் வயதில் ஒப்பாரிப் பாடல்களைப் பாடிவந்த இவர் 8ம் வகுப்பு படிக்கும் போது யுவானியார் நாடகத்தில் 'ஏரோலியான்" பாத்திரத்தில் நடித்தபோது இவரது குரல் வளத்தைப் பார்த்து பிரமித்த நாட்டுக்கூத்து மன்னன் பூந்தான் யோசப்பு அவர்கள் தனது நாடகங்களில் சேர்த்துக்கொண்டார்.

இருபதிற்கும் மேற்பட்ட இசை நாடகங்களில் நடித்திருக்கும் இவர் ஐரோப்பிய நாடுகளுக்கு வருகைதந்து கூத்துக்களில் நடித்திருக்கும் இவர் யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்பு திணைக்களத்தின் உத்தியோகத்தவராவார்.



இசை நாடகக் கலைஞர் திரு. ம.பொ. தைரியநாதன்.

1949ல் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் பிறந்த இவர் 1961ல் தனது பன்னிரண்டாவது வயதில் நடிப்புத்துறையில் கால் பதித்து இசை நாடகங்கள் வாயிலாக தனது கலை வளத்தாலும், நடிப்புத் திறனாலும் தனது திறமைகளை வளர்த்துக் கொண்ட பெரும் கலைஞராவார்.

இவரது குடும்பமே பெரும் கலைக் குடும்பம் எனச் சொல்லலாம்! இவரது சகோதர சகோதரிகள் அனைவரும் இசை நாடகக்




கலைஞர்களாக இருக்கின்றார்கள். சுன்னாகம் எம். கோபாலரத்தினம் என்னும் சங்கீத ஆசிரியரிடம் முறைப்படி சங்கீதம் கற்ற இவர் சுன்னாகம் இளம் தென்றல் மன்றத்தின் பிரதான பாடகராகவும், நடிகராகவும் இருந்திருக்கின்றார். 1963ம் ஆண்டு வண பிதா மரியசேவியர் அடிகளாரின் 'சீடர் வழியில் ஆதாம் ஏவாள்" என்ற நாடகத்தில் ஏவாள் என்னும் பாத்திரம் ஏற்று நடித்தார்.


1969ம் ஆண்டு 'நடிகமணி" வி.வி. வைரமுத்து அவர்களின் வசந்தகான சபாவில் இணைந்து பெண் பாத்திரங்களை ஏற்று நடித்தார். சங்கரதாஸ் சுவாமிகளின் நவரச நாடகங்களை நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் நடித்தபோது அந் நாடகங்களில் இவர் பெண் பாத்திரங்களில் நடித்தார். வைரமுத்துவின் அரிச்சந்திராவில் சந்திரமதியாக நடித்த இவர் பிற்காலத்தில் அரிச்சந்திரனாகவும் நடித்து புகழ் பெற்றிருக்கின்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பில் ஒலிபரப்பான ஞானசவுந்தரி, பக்த நந்தார், அரிச்சந்திரா ஆகிய நாடகங்களில் நடித்துள்ள தைரியநாதன் அவர்கள் திருமறைக் கலாமன்றத்தின் ஊடாக ரூபவாகினி தொலைக்காட்சியில் ஞானசவுந்தரி, ஏரோதன் ஆகிய நாடகங்களிலும் நடித்திருக்கின்றார்.

1997ஞ் 98ம் ஆண்டுகளில்பாரிஸ் ஜேர்மனி, இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் திருமறைக் கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்ட வடலிக் கூத்தரின் நாடகங்களிலும் நடித்திருக்கின்றார்.


Dortmund மாநகரில்

தமிழர் அரங்கம் கல்விக்கூடம்




யேர்மன் மொழி வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



Nachhilfe வகுப்புக்கள்

பாடசாலை மாணவர்களுக்கானது



தமிழ் மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழி வகுப்புக்களுக்கு கட்டணம் இல்லை



பரத நாட்டிய வகுப்புக்கள்

டோட்முண்ட் மற்றும் ஓபகவுசனில் நடைபெறுகின்றன



100 பேர் வரை அமரக் கூடிய மண்டப வசதி

உங்கள் இல்ல விழாக்கள், கலை விழாக்கள் அனைத்திற்கும் எமது மண்டபத்தை பயன்படுத்த முடியும்

Rheinische Str 76 – 80 , 44137 Dortmund

Tel.: 0231 950 979 00 & 0151 633 633 33

# Jaffna Stores

**Feilenstr. 8, 33602 Bielefeld | Tel.: 0521 174794 | Mob.: 0173 2807906**




ஆசியா, ஆபிரிக்கா, சீனா,
நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன், உடன்
மரக்கறிவகைகள், மீன் வகைகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
**Bielefeld** நகரில்
ஒரு மாபெரும் நிறுவனம்.



*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
**NSR** *தயாரிப்புகளை விற்பனைசெய்ய விரும்புவோர்*
**Jaffna Stores** *உடன் தொடர்புகொள்ளுங்கள்.*

*African உணவுப் பொருட்களை மொத்தமாகவும்*
*சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

**Öffnungszeiten:**
**Montag bis Samstag**
**von 08:30 bis 20:00**

**Geschäftsführer: Thayaharan Nadarajah**

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**






# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்..? நான் நல்லா இருக்கிறேன் பாருங்கோ. ஏனெண்டால் நெடுக, நான் ஏதோ இருக்கிறேன் எண்ட மாதிரிச் சொல்ல, உங்களுக்கும் அலுப்புத் தட்டீரும். உந்தக் கோதாரி விழுவான் ஊர் வம்பெல்லாம் எங்களுக்குச் சொல்லுறான். ஆனால் தன்ர உடல் நலத்தைக் கவனிக்கத் தெரியேல்லை எண்டுற மாதிரி ஆகீரும். உண்மையில பாருங்கோ, வயது வந்திட்டு எண்டால் (வயது போறேல்லை பாருங்கோ, வாறது) ஐரோப்பாவின்ர காலநிலை சும்மா தூக்கித் தூக்கி விளாசும். அதுக்குப் பிறகு ஒவ்வொருநாளும் தும்மல், இருமல் தொடங்கி, வீட்டுக்குள்ள பம்மல் தான் எங்கட நிலைமை. ஆனாலும் கட்டையில போற வரைக்கும் வாழுற ஆசை யாரைத்தான் விட்டது. அதுக்கு நான் மட்டும் விதி விலக்கே பாருங்கோ. உங்கள மாதிரி எனக்கும் வாழவேணும் எண்ட ஆசைக்கு இருக்குத் தானே பாருங்கோ.

இளம்பிள்ளையள் எண்டால் அதுகள் ஒருநாளைக்கு ஒரு உடுப்புத் தொடங்கி, ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒவ்வொரு விழாவுக்குப் போறது, கோயிலுக்குப் போறது, விடுமுறை எண்டால் இந்தியா இலங்கை சிங்கப்பூர் எண்டு போறது வழமை தானே. அதுகள் இளமையைக் கொண்டாடுதுகள். அப்பிடித்தான் இருக்க வேணும் கண்டியளோ. நரைகண்ட சிங்கங்கள் யாரா இருந்தாலும் அதுகளுக்கு உங்கட பிரச்சனையைத் திணியாதேங்கோ. நீங்கள் பருத்திக்கொட்டையும் புண்ணாக்கும் தான் விழுங்கிறியள் எண்டால் அதுகளும் விழுங்கவேணுமே.. இல்லத் தெரியாமல் கேக்குறன். ஆனால் எவ்வளவு சொன்னாலும் தங்கட விசயத்தைக் கொண்டுபோய் அடுத்த தலைமுறையிட்டத் திணிக்கிறது எங்கட ஆட்களுக்கு கை வந்த கலை பாருங்கோ. அப்பிடித் திணிச்சால் அதுகளுக்கு வெறுப்புத்தான் வரும் பாருங்கோ. அது புரியாமல் இங்க எல்லாரும் உந்தத் திணிப்புகளைத் தான் தொடர்ந்து நடத்துகினம்.

எங்கட பாரம்பரிய கலைகளைப் பழக்குறம் எண்ட பெயர்ல உங்கின சிலர் பண்ணுற அட்டகாசம் தாங்க முடியாமல் கலையும் வேணாம் கொலையும் வேணாம் எண்டு பிள்ளையள் ஓடுதுகளாம். என்ன பிரச்சனை எண்டு விசாரிச்சால் அது கொடுமையிலும் கொடுமை பாருங்கோ. பாரம்பரிய கலை எண்டால் என்னவெண்டு உங்க பலருக்குத் தெரியாது. அது தெரிஞ்சாலும் கலையின்ர அடிப்படை தெரியாது. ஏதோ ஒண்டைத் தலையில தூக்கி வைச்சுக் கொண்டு தாங்கள் பிரபல்யம் ஆகுறதுக்கு முயற்சி எடுக்கிறது. சரியப்பா என்னத்தையாவது செய்து துலையுங்கோ. ஆனால் அதை முதலில உங்கட பிள்ளையளில இருந்து துவங்குங்கோ. ஊர்பிள்ளையளில

தொடங்க முயற்சிக்காதேங்கோ. ஏன் எண்டால், உங்கட பிள்ளையளே உங்கட சொல்லுக் கேளாட்டில் எப்பிடி ஊர்ப்பிள்ளையள் கேக்குங்கள் எண்டு கொஞ்சமாவது யோசிச்சியளே..

விசயம் என்னவெண்டாப் பாருங்கோ, ஊரில காத்தவராயன் கூத்துப் பாத்திருப்பியள் தானே. அதே போல அரச நாடகங்கள் கூத்துகள் எண்டு எங்கட தமிழ்ப் பாரம்பரியம் நிறைய விதமான கூத்து மற்றும் நடனவகை, நாடகங்களைக் கொண்டது பாருங்கோ. அதை இப்ப ஐரோப்பிய நாடுகளில பிறந்து வளருற தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பழக்குறது நல்ல விசயம்தான். ஆனால் அது எந்த மேடைக்கு, எந்த இடத்துக்குப் பொருத்தம் எண்டுறதோட, அது சரியான கூத்து வடிவத்திலே இருக்குதோ எண்டு முதலில பரிசோதிக்க வேணும் பாருங்கோ. அதுக்கு முதலில நீங்கள் அதை பழக்குறதுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியரோ எண்டதையும் முதலில சுயபரிசோதனை செய்து பார்க்கவேணும். இரண்டுமில்லாமல் தொடங்கினால் எல்லாம் அரோகரா தான் பாருங்கோ.

கிட்டடியில ஒரு விழாவுக்குப் போனநான் பாருங்கோ. காத்தவராயன் கூத்து எண்ட பெயரிலே ஒரு கூத்து ஏத்தினாங்கள் பாருங்கோ. அது கூத்து இல்லை சுத்துமாத்து. காத்தானாக ஆடின பிள்ளைக்கு, அந்த வீரம், மிடுக்கு எதுவும் இல்லை. அது ஏதோ, சினிமா குத்துப்பாட்டுக்கு ஆடின கணக்கில தான் ஆடிச்சுது. அதுவும் பரவாயில்லை, அதில வந்த எல்லாப் பிள்ளையளும் பெரும் பாவம் செய்த பிள்ளையள் எண்டு நினைக்கிறேன் பாருங்கோ. காத்தான் ஆரம்பத்தில வந்து மேடையில நிக்கும்போது ஆரம்பிச்ச பாட்டின்ர இராகம் எங்கயோ கேட்டமாதிரி இருந்துது. அதுவும் கிட்டடியில கேட்டமாதிரி இருந்துது. காத்தவராயன் கூத்துப் பற்றி அறியாத ஒருத்தர்தான் அந்தக் கூத்தைப் பிள்ளையளுக்குப் பழக்கி இருக்கிறார் எண்டு எனக்கு ஆரம்பத்திலேயே தெரிஞ்சு போச்சு. ஏனெண்டால் பாருங்கோ காத்தவராயன் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்ததாகத் தான் கதை. ஆனால், இஞ்ச என்னடாவெண்டால் பிக்பொஸ் கமலகாசன் கணக்கில வந்தார் காத்தான். அரசரின் மகளான ஆரியமாலாவாக வந்தவ, பாரிய கொடுமைக்கு ஆளாகியிருக்குது போல கிடக்கு. அந்தப்பிள்ளைக்கு உள்ளத்தை அள்ளித்தா ரம்பா கணக்கில உடுப்பு போட்டு விட்டுக்கிடக்கு. பிள்ளை மேடையில ஏறின உடன எனக்கு முன்வரிசையில சாதாரணமா இருந்த இளம்பெடியன் ஒருத்தன், தன்னுடைய கைத்தொலைபேசியைக் கொண்டு வளைஞ்சு வளைஞ்சு படம் எடுக்கத் தொடங்கீட்டான். நல்ல காலம் காத்தானும் ஆரியமாலாவுமாக நடிச்சவை இரண்டும் பொம்பிளைப் பிள்ளையள்.

இல்லையெண்டால் அதுகள் இரண்டும் சினிமாப் படத்தில வாறமாதிரி நடனம் ஆடியிருக்குங்கள். ஆரம்பத்தில எனக்கு ஒரு விசயம் விளங்கேல்லை. என்னெண்டாப் பாருங்கோ, ஆரியமாலாவுக்கு அரச உடை அணிவிக்கேல்லை. உதென்னடா உது நவீன ஆரியமாலாவோ எண்டு நினைச்சேன். ஆனால் கடைசியில உந்த கூத்தைக் கூத்தாக்கினவர் மேடையில சொன்ன விளக்கத்தைக் கேட்டு அப்பிடியே எனக்குப் புல்லுப் புல்லா அரிச்சுப் போட்டுதெண்டா பாருங்கோவன். காத்தான் கழுவேறுற காட்சி கறுமத்திலையும் கறுமம். காத்தானாக வந்த பிள்ளை கழுவேறேக்கையும் சிரிச்சுக்கொண்டு நிண்டிச்சுது. நான் நினைக்கிறேன் அந்தப் பிள்ளைக்கே அந்தக்கூத்திலே உள்ள குளறுபடியெல்லாம் தெரிஞ்சுபோச்சுப் போல கிடக்கு. இடையில ஆரியமாலாவோட காதல் கொள்ளும் காட்சியைப் பார்த்தால் காதலிக்க நினைக்குறவனுக்கே காதல் வராது போல கிடந்துது.

உதெல்லாம் முடிஞ்சு இன்னும் ஏதோ கூத்துக்களெல்லாம் நடந்தது. நடந்து முடிஞ்சதும் தான் எனக்கு அந்தப் பாட்டு உடனே நினைவுக்கு வந்திச்சு. அந்தப் பாட்டு கிட்டடியில விக்கிரம் வேதா எண்ட படத்தில வந்த டசக்கு டசக்கு எண்ட பாட்டின்ர இராகம் பாருங்கோ. உதேனடா உந்தப் பாட்டைக்கொண்டுவந்து காத்தான் கூத்துக்குள்ள சொருகினவர் எண்டு யோசிச்சுக்கொண்டிருக்க காத்தான் கூத்துப் பழக்கின அண்ணாவி... யார் (?!) மேடையில ஏறினார். எட இவரே அது எண்டு எனக்குச் சொக்கிப் போச்சு. உவர்தானே கொஞ்சக்காலத்துக்கு முதல் உலகம் முழுக்க காத்தான் கூத்தை அரங்கேற்றப் போறன் பாருங்கோ எண்டு கொடிபிடிச்சுக்கொண்டு புறப்பட்டவர். பிறகு ஆளையே காணக்கிடைக்கேல்லை. உப்ப திடீரெண்டு வந்து நிக்கிறார். சரி என்ன சொல்லுறார் பாப்பம் எண்டு நானும் காதைத்தீட்டினன் பாருங்கோ.

காத்தானும் ஆரியமாலாவும் ஏன் நவீன உடையில வந்தவை எண்டால், இந்தக்காலத்துப் பிள்ளையளுக்கு அப்பிடிக் கூத்துப் பழக்கினாத்தான் விரும்பிச் செய்வினமாம். எட கோதாரி, அப்பிடி எண்டால் இன்னும் கொஞ்ச நாளைக்குப் பிறகு, காத்தவராயன் எந்திரன் ரஜினி கணக்கில வருவரோ எண்டு எனக்குச் சந்தேகமாக் கிடக்கு. ஆரியமாலா இனி ஐஸ்வர்யாராய் மாதிரி வரக்கூடும். நல்லா வாயில வருது கண்டியளோ.. கூத்து எண்டாலே அதற்குரிய ஆடை, அந்தக்காலத்துக்குரிய இசை, அதற்குரிய அபிநயங்களோட வாறதுதானே சிறப்பு. உதுக்குள்ள என்ன மண்ணாங்கட்டிக்கு புதுமை தேவையாக் கிடக்கு உவருக்கு. அதிலயும் இடையில வாற

பாட்டெல்லாம் திரையிசைப் பாடல் கணக்கில போகுது. உது காத்தான் கூத்தை நாசமாக்குற வேலை அல்லோ.

அதிலையும் இன்னுமொரு விசயமும் ஆள் சொல்லிச்சுது. என்னெண்டால் தாங்கள் பரம்பரை பரம்பரையா காத்தான் கூத்தை பழக்குறமாம். எடே நீங்கள் நாசமாக்குற வேலை அல்லோ செய்யுறியள். உதுக்கு பெயர் பழக்குறது இல்லை, பாழாக்குறது. அதில ஏதோ பெருமை வேறை. உங்களை மாதிரி அரைகுறையாத் தெரிஞ்சவன் எல்லாம் காவடி தூக்கித்தான் உங்க கனக்க விசயம் பாழாகிப்போய்க் கிடக்குது. நிகழ்வின்ர முடிவில அந்தக் கூத்திலே நடிச்ச பிள்ளையளின்ர நேர்காணல் நடந்தது பாருங்கோ. இந்தக் கூத்திலே நீங்கள் நடிச்சது உங்களுக்கு பிடிச்சிருந்துதா எண்டு அறிவிப்பாளர் கேக்க, எனக்கு அவ்வளவாப் பிடிக்கேல்லை, இந்த மாமா என்ர அப்பாட்டைக் கேட்ட படியாலதான் நடிச்சனான் எண்டு பிள்ளை பட்டெண்டு சொல்ல எல்லாரும் "கொல்" எண்டு சிரிச்சு விட்டாங்கள். கூத்தைப் பாழாக்கினவருக்கு, சீ... பழக்கினவருக்கு மூஞ்சை கொஞ்ச நேரம் தொங்கிப் போச்செண்டாப் பாருங்கோவன்.

பிள்ளையளுக்கு எதையும் திணிச்சுச் சொல்லிகுடுக்கக்கூடாது பாருங்கோ. சொல்லிக்குடுத்தால் அதைச் சரியாச் சொல்லிக்கொடுக்கவேணும் பாருங்கோ. இல்லையெண்டால் உப்பிடித்தான் மேடையளில கிழிஞ்சு தொங்கவேண்டி வரும். புதுமையைப் புகுத்துறது எண்டுறது வேற பாருங்கோ. பழைய கதைகளுக்குள் புதுமையைப் புகுத்தேக்க கவனமாய் இருக்கவேணும். இல்லையெண்டால் எங்களில புதுமை இல்லாமல் போயிரும் கண்டியளோ.

ஆசையில் பிறப்பது துணிவு
அந்தத் துணிவினில் பிறப்பது தெளிவு
தெளிவினில் பிறப்பது அறிவு
அந்த அறிவினில் அமைவது வாழ்வு

அப்ப வரட்டே



GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

டோட்மூண்ட் மாநகரில்

# AMMA's food

Sri Lankan & South Indian Specialities



வெள்ளிக்கிழமை அறுசுவையுடன் மரக்கறிச் சாப்பாடு
மற்றும் பாலப்பம், சனிக்கிழமை ஸ்பெஷல் பிரியாணி
மற்றும் பாலப்பம் இன்னும் பற்பல...



அமைதியாகவும் ஆனந்தமாகவும் பிரியாணி
கொத்துறொட்டி, பிட்டுக் கொத்து, இடியப்பக்கொத்து,
தோசை, இட்லி, மசாலாத்தோசை மற்றும் பாலப்பம்
போன்ற உணவுகளுடன் நீங்கள் விரும்பிய வகையிலும்
உணவுகளை உண்டு மகிழ்ந்திட...

# அம்மா'ஸ் உணவகம்



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



**Rheinische Str. 80,**
**44137 Dortmund**

**Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693**

**Web: www. ammas-food.de**

**Mail: info@ammas-food.de**

*Öffnungszeiten:*
*Mo. - Do.: 11:30 - 22:30*
*Di.: Geschlossen*
*Fr. & Sa. 11:30 - 23:00*
*So. & Feiertag: 15:00 - 22:30*




உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!




# தேசிய உணர்வை எல்லைகளுக்குள் கட்டுப்படுத்திவிட முடியுமா?

பூமிபுத்ரன்

அண்மைக் காலமாகப் பன்னாட்டுச் செய்திகளில் அதிகம் கவனத்தை ஈர்த்த விடயங்களுள் முக்கியமானவை ஈராக்குர்திஸ்தான் மற்றும் ஸ்பெயின்கட்டுலோனியா ஆகிய இடங்களில் நடைபெற்ற பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்கான மக்கள் வாக்கெடுப்பு. இந்த இரண்டு வாக்கெடுப்புகளும் சட்ட ரீதியிலான அங்கீகாரம் பெறாதவையாக இருந்த போதிலும், சொந்த மக்களின் விருப்புக்கு ஏற்றவையாக இருந்தன. மக்களிடமே இறைமை இருக்கிறது என்ற கருத்தை ஏற்றுக் கொள்பவர்களால் இந்த வாக்கெடுப்புக்களை சிறிய விடயங்களாகக் கருதி ஒதுக்கி வைத்துவிட்டு கடந்துபோக முடியாது. எனினும் தொண்டைத் தண்ணீர் வற்றும்வரை ஜனநாயகம் பேசும் நாடுகளால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதே வேதனை. ஈராக்குர்திஸ்தான் விவகாரத்தில் ஈராக் மற்றும் துருக்கி அரசாங்கங்கள் வாக்கெடுப்பு நடைபெற்ற அன்றைய நாளில் தங்கள் இராணுவ வலிமையை வெளிக்காட்டி அச்சுறுத்தலை மேற்கொண்டிருந்தன. ஸ்பெயின் அரசாங்கமோ காவல்துறையை ஏவிவிட்டு சொந்த மக்கள் என்றுகூடப் பாராமல் அவர்களைச் சகட்டுமேனிக்குத் தாக்கி பிரிவினையை ஆதரிக்காதவர்கள் கூட பிரிவினை நோக்கிச் செல்வதற்கு வழிவகுத்திருக்கின்றது.

**உலகில் உள்ள நாடுகள் பல்வேறு தேசங்களை உள்ளடக்கியவையாக உள்ளன. தேசங்களாக, தேசிய இனங்களாக, தனித்துவமாக வாழ்ந்த மக்களை எல்லைகளுக்குள் அடக்கி அவர்களின் தனித்துவத்தைப் பறித்தவர்கள் நாடுகாண் பயணங்கள் என்ற போர்வையிலும், மதங்களைப் பரப்புகிறோம், குடியேற்ற நாடுகளில் நாகரீகத்தைப் புகுத்துகிறோம் என்ற பெயரிலும் அந்தந்த நாடுகளின் வளங்களைக் கொள்ளையிட்ட மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவர்களே.**

ஐக்கிய நாடுகள் சபையில் தற்போது 193 நாடுகள் அங்கத்துவ நாடுகளாக உள்ளன. அத்தோடு வத்திக்கான் மற்றும் பாலஸ்தீனம் ஆகியவை பார்வையாளர் அந்தஸ்தோடு உள்ளன. எனினும், உலகில் 600 க்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் உள்ளதாக ஐ.நா.சபை அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் இந்த அறுநூறுக்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் 193 நாடுகளின் எல்லைகளுக்குள்ளேயே கட்டுப்பட்டு இருந்தாக வேண்டிய சூழல் உள்ளது. இதனை வேறு விதமாகச் சொல்வதானால் 600 தேசங்களை 193 நாடுகள் தங்களின் எல்லைகளுக்குள் விரும்பியோ விரும்பாமலோ கட்டுப்படுத்தி வைத்துள்ளன.

சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனதும் பிறப்புரிமை. இது உலகளாவிய சட்டங்களினால் மாத்திரமன்றி தார்மீகச் சிந்தனையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. எனினும் உலக நாடுகளின் - அதிலும் வல்லரசு நாடுகளின் நலன்கள் எனப் பார்க்கும் போது தேசங்களின் தனித்துவம், சுயம் என்பவை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையே 21 ஆம் நூற்றாண்டிலும் நீடிக்கிறது.

குர்திஸ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஈராக், துருக்கி, சிரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் வாழுகிறார்கள். ஒரு காலத்தில் தனித்துவமான நாடாகக் காணப்பட்ட குர்திஸ்தான் தற்போது 4 நாடுகளில் சிறுசிறு பகுதிகளாகத்

துண்டாடப்பட்டுக் கிடக்கிறது. பிரித்தாளும் தந்திரத்தில் வல்லவர்களான பிரித்தானியர்களே இந்தக் கைங்கரியத்தைச் செய்தவர்கள் என்றாலும் கூட, சுதந்திரத்திற்காகப் பல தசாப்தங்களாகப் போராடி வரும் அந்த மக்கள்பால் உள்ள நியாயத்தைக் கருத்தில் கொண்டு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற பிரித்தானியா முன்வரவில்லை. ஈழத் தமிழர்களுக்கு எதைச் செய்ததோ அதையே குர்திஸ் மக்களுக்கும் பிரித்தானியா செய்திருக்கிறது.

குர்திஸ் மக்களைப் பொறுத்தவரை தமது தனித்துவத்தைப் பேணக் கூடிய ஒரு சம~;டி அமைப்பை ஈராக்கில் மாத்திரமே அவர்கள் கொண்டுள்ளார்கள். சிரியாவில் அந்த மக்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டு உள்ளது. துருக்கியில் தங்கள் தாய்மொழியில் கற்பதற்குக் கூடத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நாட்டில் பல தசாப்பதங்களாக ஆயுதப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. ஈரான் குர்தி~; மக்களின் சுதந்திரக் குரல் மெதுவாகவே ஒலிக்கும் நிலை உள்ளது.

தற்போதைய நிலையில் ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் தலையெடுத்துள்ள ஐ.எஸ். தீவிரவாதத்தை ஒழிப்பதில் குர்திஸ் படைகள் மற்றும் துணை இராணுவக் குழுக்களின் பங்கு முக்கியமானது. தங்களின் பங்களிப்பு மூலமாக தமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என நம்பிய குர்திஸ் தலைமையே தற்போதைய மக்கள் வாக்கெடுப்பைக் கோரியது. ஈராக்கில் உள்ள குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் ஜனாதிபதியாக உள்ள மர்சூத் பர்சானி இந்த வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்ததில் இருந்து, குர்திஸ் அரசாங்கத்துக்கு எதிரான நெருக்கடிகள் ஆரம்பமாகிவிட்டன.

தங்கள் இராணுவ பலத்தைக் காட்டி ஈராக் மற்றும் துருக்கி அரசாங்கங்கள் குர்திஸ் அரசாங்கத்தை அச்சுறுத்தி வருவதுடன், நான்கு பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட குர்திஸ்தானின் எல்லைகளை மூடுவதோடு, வான் பரப்பையும் மூடப் போவதாக துருக்கி எச்சரித்துள்ளது. வழங்கலுக்காக துருக்கியையே நம்பியிருக்கும் குர்திஸ்தான் இத்தகைய அச்சுறுத்தலுக்குப் பணிந்தே ஆகவேண்டிய சூழலே உள்ளது.

அதேநேரம், எதிரி நாடுகள் எனக் கருதப்படும் துருக்கியும் ஈரானும் இந்த விவகாரம் காரணமாக நெருங்கிவரத் தொடங்கியுள்ளன. உலகின் பெரும்பாலான வல்லரசு நாடுகள் குர்திஸ்தான் வாக்கெடுப்பை அங்கீகரிக்க மறுத்துள்ள நிலையில் பாலஸ்தீன மக்களின் சுதந்திரத்தை அங்கீகரிக்க மறுத்துவரும் இஸ்ரேல் மாத்திரம் இதனை வரவேற்றுள்ளது. அயல் நாடுகளின் ஸ்திரத் தன்மையைக் குலைப்பதில் ஆர்வம் கொண்டுள்ள இஸ்ரேல் அதனை வரவேற்றதில் வியப்பேதும் இல்லை.

குர்திஸ்தானின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம் காரணமாக அது தனிநாடாக ஆவதை எதற்காக இஸ்ரேல் விரும்புகிறதோ, அதே காரணத்திற்காகவே அதன் அயல் நாடுகள் அந்த நாட்டின் சுதந்திரத்தை எதிர்க்கின்றன என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கட்டுலோனியா விவகாரம் சற்று வித்தியாசமானது. ஸ்பெயின் நாட்டில் கட்டுலோனிய மக்களுக்கு எந்தவிதமான நெருக்கடியும் அச்சுறுத்தலும் இல்லை. ஆனாலும் அவர்கள் தாம் தனித்துவமானவர்கள் என்பதை உணர்ந்தமையால் தாங்கள் தனித்துவமான நாடாக, தேசமாக இருப்பதை விரும்புகிறார்கள். தேசியம் என்ற பெயரால் மற்றவர்களால் ஆளப்படுவதை அவமானமாக அவர்கள் கருதுகிறார்கள். எனவே, சர்வதேச சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்வதற்கான தமது உரிமையைக் கோரி நிற்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டில் ஏற்கனவே பாஸ்க் இன மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை தீர்வு காணப்படாமல் இன்னமும் அப்படியே இருக்கிறது. தனிநாடு அமைப்பதற்கான அவர்களின் ஆயுதப் போராட்டம் தற்காலிகமாக முடிவிற்குக் கொண்டுவரப் பட்டிருந்தாலும் கூட, கட்டுலோனியா விவகாரம் பாஸ்க் மக்களிடையே மீண்டும் ஒரு எழுச்சியை ஏற்படுத்தக் கூடும் என மட்ரிட் அரசாங்கம் அஞ்சுகிறது.

ஸ்பெயினில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்று மத்தியில் இல்லாத நிலையில், கட்டுலோனியா விடுதலையை ஆதரிக்கும் கட்சிகள் கடந்த தேர்தலில் கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடுகள் என்ற வரையறைக்குள் மூடிய அறைக்குள் சுவாசிக்கும் நிர்ப்பந்தத்தை தேசிய இனங்களுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களின் உணர்வுகளை மழுங்கடித்து விடலாம் என வல்லரசுகளும், அடக்கு முறை ஆட்சியாளர்களும் கருதிச் செயற்பட்டு வருவதே இன்றைய உலக நியதியாக உள்ளது. எனினும், சுய மரியாதையால் உந்தப்படும் மக்களை அதிக காலம் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியாது என்பதே யதார்த்தம்.

Importas
Cash & Carry

# Cash & Carry in Zurich

## Biggest Asian Shop in Swiss




## IMPORTAS CASH & CARRY

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

**Direct Importers and Solo Distributors of**

Kings · Subash · Elakkia · Niru · Suryaa · Maliban · Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56



# 5

# அது ஒரு நிலாக்காலம்

கவிமகன்

மதி மயங்கி விழுந்த கோலம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட அவளை ஏற்றிக் கொண்டு பயணித்த கார் மருத்துவ மனைக்குள் நுழைகிறது. அவசர சிகிச்சை பிரிவுகள் ஏதும் அற்ற அவளது ஊரில் இருந்த ஒரே மருத்துவர் உடனடி முதலுதவிகளை செய்து விழி திறக்க வைக்கிறார். ஆனாலும் மேலதிக சிகிச்சைகளுக்கு எந்த வசதிகளுமற்று இருந்ததால், அவசர ஊர்தி மூலமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க மேலதிக சிகிச்சை அங்கே தொடர்கிறது. துளசியோ நடந்தது எதையும் புரிந்து கொள்ளாதவனாக அவனின் கையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மதியின் கைகள் நிரந்தரமாக பிரிந்துவிடுமோ என்ற ஏக்கத்தில் அழுது கொண்டிருக்கிறான். அவனை தேற்றும் நிலையில்அங்கே யாரும் இல்லை ஏனெனில் அங்கே அனைவரும் அதே மனநிலையில் தான் இருந்தார்கள். ஒருவரை ஒருவர் தேற்ற வழியில்லை.

நேசித்த ஒவ்வொன்றையும் இழக்கப் போகிறோம் என்ற உடனே அவளை ஆக்கிரமித்த அதிர்ச்சி இரத்த அழுத்தமாகிவிட அவள் நிலை குலைந்திருந்தாள். சுய நினைவை இழந்து கிடந்தவளை, மருத்துவமனை கட்டில் அணைத்துக் கொள்ள, விரைந்து வந்த மருத்துவர் உடனடி சிகிச்சை மூலம் விழி திறக்க வைக்கிறார். என்ன மதி என்னாச்சு உனக்கு? கேட்ட குரலை அடையாளம் கண்டவளாய், தெரியவில்லை என்கிறாள். என்ன மதி நீ இப்பிடி ஆகீட்டாய்? மருத்துவர் உரிமையோடு விசாரித்த போது தான் தனது பள்ளித் தோழனுக்கு உண்மையை கூறுகிறாள். அது ஒன்றுமில்லை என்னால் நான் நேசித்த எதையும் விட்டு செல்ல முடியவில்லை.

"திருமணம்" என்ற ஒற்றை சொல்லுக்குள் என் ஆசா பாசங்களை துறந்து நான் நேசித்தவற்றை தொலைத்து யார் என்றே தெரியாத ஒருவரோடு பல்லாயிரம் மைல்கள் தாண்டி எவ்வாறு வாழ முடியும்? என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை அது தான் எனக்கு இவ்வாறு ஆகியது. அவன் ஆச்சரியமாக பார்த்தான். இந்த காலத்தில் தாயக விடுதலை, தமிழ்மக்களுக்கான சுபீட்சம் என்று தன்னாட்சி தமிழின விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த பல்லாயிரம் இளையவர்கள் மத்தியிலும், இங்கே வாழும் பல இளையவர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு தமிழனிலும் பல ஆயிரம் பேர் இந்த போர் சூழ்ந்த தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்து ஓடலாம் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் இவளோ நேசித்த ஒன்றை விட்டு செல்ல முடியாமல் மயங்குற நிலைக்கு சென்றிருக்கிறாள்.

சரி மதி நீ ஓய்வெடு, மருத்துவ அறையை விட்டு வெளியில் வந்தவன் பெற்றவரிடம் மதிக்கு ஒன்றுமில்ல அவள் நலமா இருக்காள். இப்ப அவளோட கதைக்க வேண்டாம் ஓய்வெடுக்கட்டும் என்று பல மொழிவுகளை வழங்கி செல்கிறான். சரிப்பா அவளுக்கு ஒன்றுமில்லை என்றால் காணும் எல்லாத்தையும் எங்கட வைரவர் பாத்துப்பார் என்று விழி கலங்கியபடி நின்ற தாய் கையெடுத்து கும்பிட "அம்மா அவள எதுக்கும் கட்டாயப்படுத்தாதீங்க..." என்ற மறைமுக கட்டளை ஒன்றையும் வழங்கி செல்கிறான். அவன் ஏதோ ஒன்றை தமக்கு புரிய வைக்கிறான்

என்பதை தந்தை உணர்கிறார். ஆனால் எதுவும் பேசாது கையெடுத்து அவனை வணங்குகிறார்.

இரண்டு நாட்கள் மருத்துவமனை ஓய்வில் இருந்தவள் வீடு வந்து சேர்ந்த போது அவளுக்குள் பல தெளிவுகள் பிறந்திருந்தன. அதற்கு காரணம் அவளது பள்ளி தோழனாக இருக்கலாம். அல்லது வெளிநாட்டு மாப்பிளையாக இருக்கலாம். இருமுனை பாதைகள் அவள் முன்னே விரிந்து கிடந்த போது நடு வீதியில் தான் நிற்பதாகவே அவள் உணர்ந்தாள். எப் பாதையில் தான் பயணிக்க வேண்டும் என்பதை அவளால் முடிவெடுக்க முடியாமல் தவித்தாள். ஆனாலும் மருத்துவ நண்பனின் தெளிவான பார்வை அவளை முடிவெடுக்கும் நிலைக்கு கொண்டு வந்திருந்தது. அதே வேளை மாப்பிளையோ அவள் மருத்துவமனையில் இருந்த நாட்களில் தாய், தந்தை என உறவுகளின் தடைகளையும் மீறி மதியின் தாய் தந்தையின் தடையையும் மீறி அவளை கவனித்தான். தனது மனைவி ஆகப் போறவளை நான் கவனிக்காது யார் கவனிப்பார்? என்று விளக்கம் தந்தான். ஆனால் இங்கே மதி என்ற ஒரு மனது இவற்றை ஏற்காமல் படுத்திருப்பதை உணராது அவள் சம்மதம் தெரிவித்து தனக்கு மனைவியாகி விட்டதான உணர்வை அவன் காட்டத் தொடங்கிய போது அதிர்ந்து பேசத் தெரியாத அவள் அமைதியாக இருக்க வேண்டிய சூழல்.

தந்தையிடம் தயவு செய்து அவரை வர வேண்டாம் என்று சொல்லுங்கோ இதென்ன அவரோட மனைவி மாதிரி அக்கறை கொள்கிறார்? இதெல்லாம் சுத்தமாக எனக்கு பிடிக்கவில்லை. எனக்கு வெளிநாடு போகவும் விருப்பமில்லை. நான் உங்களோட இருக்க வேணும் அப்பா பிளீஸ். அவள் கெஞ்சுவதை சகிக்க முடியாது மனம் வருந்தி நின்றார் தந்தை. ஆனால் அவனை தடுக்கவும் மனது வரவில்லை. அவன் நல்ல பெடியன் தன் மகளை கவனமாக வாழவைப்பான் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். " சரி பிள்ளை நான் சொல்லுறன்" என அவளிடம் கூறி சென்றாலும் அவனுக்கு எதுவும் சொல்லாமல் இருந்தார். இருநாட்கள் பல மனப் போராட்டத்துடன் அத்தனையையும் சகித்து கொண்ட மதிக்கு ஆறுதலாக இருந்தவன் மருத்துவன் மட்டுமே.

அவனின் பல அறிவுரைகள் அவளுக்கு தன் பாதை எது என்பதை தெளிவு படுத்தியது. அவள் முடிவெடுத்திருந்தாள். தான் என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தாள். தாய் தந்தைக்காக ஒரு முடிவையும் தனக்காக இன்னொரு முடிவையும் எடுத்து வாழ்க்கையை தொலைத்து விட அவளால் முடியாது ஆனால் தான் விரும்பிய வாழ்வை அவள் வாழத் துடித்தாள். இன்று தன் முடிவை என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் இருந்து கொண்டு தாயிடம் சொல்வதற்காக செல்கிறாள்... (தொடரும்)




# இந்திய அரசியல்...



தமிழகத்திலிருந்து
சீதாராமன்

ஒரு காலத்தில் இந்திரா என்றால் இந்தியா என்ற பிரச்சாரம் தான் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பேசு பொருளாக இருந்தது. அந்த இடத்தில் இருந்து அவரைக் கொலை செய்து அகற்றியதில் பிராந்திய மற்றும் உலக வல்லசுகளின் பங்கும் இருந்தது. அவற்றில் ஈழத் தமிழரின் அரசியல் விடுதலைப் போராட்டமும் பெரும் காரணியாக விளங்கிளது. ஆனால் அவை இலங்கை இந்திய அரசுகளாலும் உலக வல்லரசுகளாலும் வெளி வராமல் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்க வைக்கப் பட்ட பேரறிவாளன் நளினி போன்றோரின் நிரந்தர சிறை தண்டனையும் விடுத்து வரும் உண்மைகள் இவைதான்.

இன்று இந்தியா என்றால் இந்துத்துவா இந்துத்துவா என்றால் பா.ஜ.க. , பா.ஜ.க. என்றால் நரேந்திர மோடியும் அமித் ஷாவும்தான் என்ற புரிதலை இந்திய மத்திய அரசியலின் செயற்பாடுகளும் தெற்கு தென்னிந்திய பிராந்தியத்தில் தன்னை ஒரு நாயகனாக நிலை நிறுத்துவதில் மிக உறுதியாகச் செயற்பட்டு வருகிறார்.



இந்திய மத்திய அரசியலில் ஆளும் பிரதமர் மோடியின் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி தனது கட்சியை அகில இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஆளும் கட்சியாக மாற்றுவதிலே மட்டுமே கவனமாகச் செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது மத்திய அரசின் செயல் பாடுகள் எல்லாம் இந்திய மக்கள் நலன் சார்ந்ததாக இல்லை. மத்திய அரசு தனது ஆளுமையை அனைத்து மாநிலங்களிலும் உருவாக்க முற்படுகி படுகிறது. அதன் முதல் வெற்றியதக பிகார் மாநிலத்தில் கூட்டணிக் கட்சிகளிடையே ஏற்பட்ட பிளவால் முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமார் பதவி விலகினார். அவர் ராஜினாமா செய்த 12 மணிநேரத்தில் பா.ஜ.க வழங்கிய ஆதரவோடு மீண்டும் முதலமைச்சர் ஆகிறார். இப்பொழுது தேர்தல் மூலம் பெற முடியாமல் போன பிகார் மாநில ஆட்சியில் பா.ஜ.க. முக்கிய பங்காளி. பிகார் இப்பொழுது பா.ஜ.க. வசம் உள்ளது.

நிதிஷ் குமாரின் இந்ந திடீர் பல்டி அவர் அமைக்க இருந்து பா.ஜ.க.வுக்கு எதிராகத் திரட்ட இருந்த எதிர்க் கட்சிகளின் மாபெரும் கூட்டணிக் கனவு சிதறுண்டு போனது. அதே நேரத்தில் அப்படியான ஒரு எதிரணியை உருவாக விடாது கருவில் அழித்த பெருமையும் அடுத்த தேர்தலை எளிதில் எதிர் கொள்ளும் பலத்தைப் பெற வழி கோலிவிட்டது பா.ஜ.க. இத்தகைய செயற்பாடுகளால் மாநிலங்களின் பிராந்தியக் கட்சிகளின் ஆதிக்கத்தை கைப்பற்றுவது அல்லது சிதறடிப்பதை தனது 2019 தேர்தல் இலக்காக வைத்து காய்களை நகர்த்துகிறது என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இப்பொழுது தமிழகத்தில் முன்னாள் முதல்வரின் மரணம் பற்றிய மர்ம முடிச்சுகள் அவற்றின் பின்னால் வெளியாகும் அரசியல் காரணிகள் பா.ஜ.க.வின் கரங்கள் பலமாக இயக்குவதை பல அரசியல்

கட்சிகளின் தலைவர்களும் அரசியல் அவதானிகளும் பேசி வருகின்றனர். இன்று ஜெயலலிதாவும் அகற்றப்பட்ட நிலையில் கருணாநிதியும் செயலற்றுள்ள நிலையில் பெரும் அரசியல் வெற்றிடமே ஏற்பட்டுள்ளது. அந்த வெற்றிடத்தில் தி.மு.க. வந்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் உள்ளது. அப்படி வர விடக் கூடாது என்பதில் மோடியின் அரசியல் வியூகங்கள் திட்டமிடப் படுகின்றன.

ஜெயலலிதாவின் மரணம் ஒரு திட்டமிட்ட அரசியல் கொலையாகவே தென்படுகின்றது. அதற்கு இரண்டு முக்கிய காரணிகளைக் குறிப்பிடலாம். முதலாவது அவரை விட்டால் பிரதமர் போட்டியில் மோடிக்குப் பெரும் சவாலாக 2019ல் வளர்ந்து விடுவார் என்பது ஒரு வலுவான காரணி. குறிப்பாக காங்கிரஸில் ராகுல் காந்தி ஒரு மக்கள் கவர்ச்சி அற்ற தலைவராக இருக்கும் வரை அவரால் மோடிக்குப் பெரிய சவாலாக காங்கிரஸ் கட்சியை மீளக் கட்டி எழுப்ப முடியாது. கை தேர்ந்த காரியவாதியான மோடியை இந்தியாவில் அடுத்த தேர்தலில் விழுத்த லேடி எனப் பட்ட ஜெய லலிதாவை விட்டால் இந்திய மாநிலங்களில் வேறு தலைவர்களை காட்ட முடியாது.

இரண்டாவதாக இலங்கை அரசுடன் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் மோடி ஏற்படுத்திய நெருக்கம் ஏற்கனவே கூட்டணி அமைத்திருந்த வை.கோவை குப்பையில் தூக்கிப் போடுவது போலத் தூக்கி எறிந்த காரணம் வை.கோ. புலிகளை ஆதரித்த தமிழ் அரசில் வாதி. சிங்கள இன வாதி மகிந்தர் மோடியின் இந்தித்துவ வாதத்துக்கு இயல்பான இசைவான அரசியலே; மேலும் ஆளுமை திறன் மிக்க மகிந்தருடன் கையில காசு வாயில தோசை என்பது போல இலகுவாகப் பேரத்தை முடித்து விடலாம். இலங்கை அரசை சீனாவிடம் இருந்து மீட்டு எடுக்க வேண்டிய பிராந்திய அரசியல், இந்திய சந்தை விரிவாக்கம், திரிகோண மலை துறைமுகம் எண்ணெய் தாங்கிகள் முக்கிய விடயங்களை மகிந்தர் மூலம் அடைந்து விடலாம்.

இதில் இரண்டாவதாக உள்ள காரணிதான் ஜெய லலிதாவுக்கு எமனாக வாய்த்தது. அவரது போதாத காலம் தெரிந்தோ தெரியாமலோ அல்லது மாநில தேர்தல் அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாகவோ அவர் புலிகளைத் தீவிரமாக எதிர்த்த நிலையைக் கைவிட்டு ஈழத் தமிழர் விடுதலை, தனி ஈழம், போர்க் குற்ற விசாரணை போன்ற மிகத் தீவிரமான ஈழத் தமிழர் ஆதரவு நிலையை எடுத்தார்.

அவர் அவ்வாறு செய்யாமல் கருணா நிதியைப் போன்று தேர்தல் பேச்சோடு நிறுத்தி இருந்தாலும் தப்பி இருக்க முடியும். ஆனால் சட்ட சபையில் இரண்டு தமிழ் ஈழ ஆதரவுத் தீர்மானங்களைத் தாமே முன்மொழிந்து அதனை எல்லா மாநிலக் கட்சிகளையும் ஏற்க வேண்டிய நிலையை உருவாக்கினார்.அவர் கொழுத்திப் போட்ட திரி ஈழத்தில் வட மாகாண சபையிலும் வெடித்து ஐ.நா. செயலர் வரையும் எட்டி உலக அளவில் ஒரு புயலை எழுப்ப காரணமானார்.

சொத்துக் குவிப்பு வழக்கின் மூலம் தி.மு.க. காங்கிரஸ் கட்சிகளின் சதி வழக்குகளில் சிக்கித் தவித்த ஜெயலலிதா நீதிபதி குன்ஹாவின் அதிரடித் தீர்ப்பால் சற்றும் எதிர்பார்க்காத நிலையில் நீதி மன்றத்தில் இருந்தே நேராகச் சிறைச் சாலைக்கு அனுப்பப் பட்டார். இப்படி ஒரு நிலை ஏற்பட அவரது அரசியல் நிலைப்பாடு காரணம் என்பதற்கு வழக்கைத் தொடுத்த சுப்பிரமணியன் சுவாமியே தீர்ப்பு வர முன்னர் ஜெ. சிறைக்குப் போவார் என கூறிவிட்டார்.

எப்படி ராஜீவ் காந்தி கொலையுண்ட செய்திகள் வெளிவரும் முன்னரே புலிகள் கொன்று விட்டனர் என அப்போது சட்ட அமைச்சராக இருந்து சொன்னாரோ அது போன்றே ஜெ.யின் சிறையை முன்கூட்டிச் சொன்னவர். இப்போது பா.ஜ.க.வுடன் இணைந்து விட்ட காரணத்தால் அவரும் மகிந்தரின் கூட்டாளி என்பதால் ஜெ.யின் விதி தலை கீழாகியது.

ஓன்றாக ஜெயின் வீட்டில் விருந்துண்டு நட்போடு அவரது ஆரோக்கியம் தொடர்பாக அக்கறையோடு 2011ல் சசிகலாவின் சூழ்ச்சியை வெளிப் படுத்திய அதே மோடி ஜெயின் மரணத்தைக் கூட மௌனமாக வரவேற்ற காட்சியை 2016ல் உலகம் கண்டது. அரசியலில் நிரந்தர நண்பரும் கிடையாது நிரந்தர எதிரியும் கிடையாது என்பதை இந்திய அரசியலில் மோடி லேடி உறவு நிரூபித்துவிட்டது.

காங்கிரஸ் இலங்கை தொடர்பாகவும் இலங்கைத் தமிழர் தொடர்பாகவும் கொண்டிருந்த நிலைப் பாட்டையே பா.ஜ.க.வும் கொண்டிருக்கிறது என்பதை ஜெ.யின் மரணத்தை அது கையாண்ட விதம் காட்டுகிறது. எதுவித அனுதாபமோ கவலையோ படாமல் அது தனது ஆளுமையை நிலை நிறுத்துவதில் கவனமாக உள்ளது.

ஜெயின் மரணம் கொலையா இல்லையா என்ற கேள்வி இப்பொழுது தமிழக மக்கள் மத்தியில் மிகப் பெரும் பேசு பொருளாக அரசியலில் இருக்கிறது. அதே நேரத்தில் பா.ஜ.க. தனக்குத் தேவையான அனைத்து அரசியல் முடிவுகளையும் தமிழக அரசை வைத்தே செயற்படுத்தி வருகிறது. அதற்கு தமிழக ஆளுநராக செயற்படும் மத்தியப் பிரதேச ஆளுநர் வித்தியா சாகர் ராவ் மிக லாவகமாக தேவைக்கு ஏற்ற மாதிரி தமிழகத்துக்கு வந்தும் வராமலும் தமிழக அரசியலை யார் நடத்த வேண்டும் யார் நடத்தக் கூடாது என்பதை தீர்மானிக்கிறார்.



ஜெ.யின் மரணத்தை அடுத்து கட்சியையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் ஆற்றல் பெற்றவராக ஜெ.யின் 30 ஆண்டுகளுக்கு மேலாக உடன் பிறவாச் சகோதரி என ஜெ.யினால் பாராட்டப் பட்ட சசிகலா நடராசன் இருந்தார். அவரோடு ஜெ.யின் மரணத்தின் பொழுதே பேரம் பேச வந்த வெங்கையா நாயுடு சில விடையங்களில் தோற்ற காரணத்தாலோ என்னவோ சசிகலா ஒதுக்கப்பட வேண்டியவராக பா.ஜ.க.வால் பார்க்கப் பட்டது. அவரின் தலைமை அ.இ.தி.மு.க. வுக்கு பலம் கொடுக்கும் என்ற நிலை தொடக்கத்தில் உருவானது. மோடி அரசும் அவருக்கு ஆதரவாகப் பல சலுகைகளை காட்டுவது போலவே நடந்து கொண்டது.

ஆனால் மாநில நிர்வாகத்தை தனது கைக்குள் வைத்துக் கொள்ளும் சசிகலாவின் உறுதியை மோடியால் சிதைத்து தமது முக்கிய சட்டங்களை தமிழகத்தில் அமல்படுத்த முடிய வில்லை என்கிற நிலை உருவானதும் சசிகலாவும் அகற்றப்பட வேண்டியவராக மோடி அரசு தீர்மானித்து விட்டது. சட்டப்படியான அவரது ஆட்சி அமைக்கும் கோரிக்கையை ஆளுநர் திட்டமிட்டே தள்ளிப் போட்டுக் காலத்தைக் கடத்தினார்.

அதே நேரத்தில் உச்ச நீதி மன்றத்தில் கிடப்பிலே கிடந்த சொத்துக் குவிப்பு வழக்கின் சீராய்வு மனுவை தூசி தட்டி எடுத்து சசிகலாவை சிறைக்குள் தள்ளம் வேலையை துரிதப் படுத்தி சிறைக்குள்ளே தள்ளியது மோடி அரசு. சரியோ பிழையோ தமிழகத்தின் அரசியல் உறுதிக்கு அடையாளமாக விளங்கிய ஜெய லலிதாவும் சசிகலாவும் திட்டமிட்டே அகற்றப் பட்டனர் என்பதே உண்மை.

சசிகலாவும் அவரத குடும்ப உறுப்பினர்கள் 13 பேரும் முன்னரே கொலைச் சதியில் தொடர்பு கொண்டவர்கள் எனக் காணப் பட்டதால் சசிகலாவுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை உருவாக்குவது எவருக்கும் எளிதாக இருந்தது. மேலும் சொத்துக் குவிப்பில் கூட்டுக் குற்றவாளியாக சிறைத் தண்டனை பெற்ற சசிகலாவின் சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து அவரை சிறைக்குள் போடுவது அரசியலில் அவர் பெற்றிருந்த ஆளுமையை அழித்துவிட அவசியம் ஆனது.

ஜெ சசிகலா இல்லாத தமிழக அரசியலில் இடம் பிடிக்க பலப் பரீட்சையில் பலரும் ஆர்வமாக உள்ளனர். இப்போதைக்கு இதோ வருகிறேன் என அறிவிப்பு விட்டுள்ளவர் சினிமா நட்சத்திர நடிகர் இயக்குநர் தயாரிப்பாளர் போன்ற பல திறமைகளை வெற்றிகரமாக வெளிப்படுத்தி உலக நாயகன் என பாராட்டுதலைப் பெற்றுள்ள கமலஹாசன் களத்தில் இறங்கும் முடிவை அறிவித்து விட்டார்.

இவருக்கு பலமான இரசிகர்களின் ஆதரவும் சுப்பர் ஸ்டார் ரஜினி காந்தின் ஆதரவும் அவரது ரசிகர்கள் பலமும் விஜய் தொலைக் காட்சியில் 24 மணி நேரமும் காட்சிப் படுத்தப் பட்டு வரும் பிக் பாஸ் என்ற நேரடி ஒளிபரப்பின் நெறியாளராக அடிக்கடி மக்களின் வீடுகளில் விளையாடி வருகிறார். இவை எல்லாம் இவருக்கு தமிழகத்தை ஆளும் அதிகாரத்தைக் கொடுக்கிறதோ இல்லையோ பா.ஜ.க. வுக்கு தமிழகத்தில் அ.தி.மு.க.வுடன்; கூட்டணி அமைத்து தமிழகத்தில் அரசியல் செய்ய உதவும் என்ற நம்பிக்கை இப்போது உள்ளது.

ஆளும் பா.ஜ.க. தமிழகத்துக்கு நிரந்தரமாக ஒரு ஆளுநரை நியமித்ததன் மூலம் தமிழகத்தில் அதன் தேவைகள் அனைத்தும் பெற்றுவிடத் தேவையான ஆயத்த ஏற்பாடுகளும் நிறைவு பெற்று விட்டதையே காட்டுகிறது. ஒரு வருடத்துக்கு மேலாக மாகாராஷ்டிர மாநில ஆளுநரே தமிழ் நாட்டையும் நிர்வகித்து வந்த நிலையில. இப்பொழுதான் நிரந்தர ஆளுநராக பன்வாரிலால் புரோஹித் நியமிக்கப் பட்டுள்ளார். 77 வயதான இவர் இந்திய பார்வாட் புளொக் கட்சி மூலம் அரசியலில் புகுந்து காங்கிரஸ் கட்சியில் போய் அங்கிருந்து பா.ஜ.க.வுக்குள் பறந்து வந்த கிளி இவர். தமிழ் மாநிலத்தில் செய்ய வேண்டிய அனைத்து அரசியல் திலாலங்கடி வேலைகளையும் செய்து முடித்த பின்னே தார் றோட்டிலே வண்டி ஓட்டுவதுபோல தமது இறுதிக் காலத்தை ஓட்டிவிடும் அளவுக்கு அவரது வயதும் அரசியல் அனுபவமும் கைகொடுத்து உதவும் என நம்பலாம்.

ஆனால் தமிழகத்தின் அரசியல் கட்சிகளும் மக்களும் பா.ஜ.க.வினால் பலத்த அடிவாங்கி நொந்து நூலாகி எங்கும் ஆர்பாட்டம் போராட்டம் என கொந்தளிக்கும் காட்சிகளே இப்பொழுது காணப்படுகிறது. இவற்வீறை ஆளுநர் பன்வாரிலால்எப்படிக் கையாளப் போகிறார் என்பதை இனித்தான் பார்க்க முடியும்.


PAGEVISION
Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02
www.pagevision.ch
உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்
HP dc7700 Tower
Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz
80GB Festplatte
2GB DDR2 RAM
DVD/CD-Brenner
8x USB 2.0
1 Jahr Garantie
CHF 60.- inkl. MwSt.
PC Systeme komplett ab CHF 329.-!!
Keine versteckten Kosten, alles inkl. MwSt.!
!! REPARATUREN ALLER MARKEN !!
Lenovo T410 Notebook
Intel Core i5 m540 - 2x 2.53GHz
250GB Festplatte
4GB DDR3 RAM
DVD-Brenner
3x USB 2.0, USB 3.0
1 Jahr Garantie
CHF 249.- inkl. MwSt.
IPHONEFAN
www.iphonefan.ch
sehr schnelle Lieferung!
Hauslieferungen
Vor-Ort Installationen
Netzwerklösungen für Firmen
Reparaturen aller Marken!
iPhone Reparaturen:
www.iphonefan.ch
Mac Pro 1.1
2x 5150 (4x 2.66GHz)
250GB Festplatte
8GB DDR2 RAM
Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM
1 Jahr Garantie
CHF 290.- inkl. MwSt.
günstige gebrauchte Computer Reparaturen aller Marken
www.pckaufen.ch
Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50
Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07
für Neuware besuchen Sie
pagevision.ch

ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!

**Direct Booking Nr.**
**0176 21 68 21 49**

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

CENTURY
TRAVELS



**Transport Service**
**nach Frankfurt**



**CENTURY TRAVELS GmbH**

**nach Colombo**
**ab 499€**

GUARANTEED BEST PRICE



**Ram Nishanthan**
Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
0176 21 68 21 49

**Web: www.centurytravels.de | eMail: info@centurytravels.de**

**Hauptsitz:**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

**Niederlassung:**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665

**Sri Lanka:**
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

# சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள், சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொள்ள




- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாடிக்கையாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

KTS

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் மற்றும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது

REISEGARANTIE | SRV FSV Schweizer Reise-Verband Fédération Suisse du Voyage Federazione Svizzera di Viaggi | hweiz Tourismus. Mitglied | IATA Accredited Agent

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5, 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**

*Preise inkl. Taxen und Zuschläge in der günstigsten Buchnungsklasse



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
தளபதி
விஜய்
நடிக்கும்
2 GET FREE TICKETS
*T&C Apply
WHEN YOU BUY A NEW STB
KTV
TENT KOTTA + EROSNOW
7000க்கும் அதிகமான புத்தம்புதிய
TAMIL & HINDI திரைப்படங்கள்
மெர்சல்
ஒரு வருட இணைப்புச் சந்தா
€99
SET TOP BOX INCLUDED
- FRANCE -
036 967 2151
- GERMANY -
069 1200 7102
www.lycatv.tv